Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + II = 14

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உந்துருளிகளை பழுது பார்க்கவும்
சேவிஸ் செய்யவும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
இரத்தினம் ஊர்திச் சேவைத்தளம்
30, 32, சிராம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்
காலை 7.00 மணி முதல் மாலை 5.30 வரை
(ஞாயிறு விடுமுறை) குறித்த நேரத்தில்
சேவிஸ் செய்து தரப்படும்.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஐப்பசி 20ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 21 (05.11.2004) வெள்ளிக்கிழமை இதழ்:36

### இனப் பிரச்சினைக்கான சமாதான முயற்சிகள் குறித்து

# பிரபாகரனுடன் பேச்சு நடத்த பீற்றர்சன் வன்னி வருகிறார்!





(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக பேச்சு நடத்த இலங்கை வரவுள்ள நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அடுத்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க வுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவித்தன.

எதிர்வரும் புதன்கிழமை கொழும்பு வரவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் , அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளார்.

இவர் புதனன்று ஜனாதிபதி சந்திரிகாவை கொழும்பில் சந்தித்துப் பேசவுள்ளதுடன் வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்வார். கிளிநொச்சியில் ஜான் பீற்றர்சன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சு நடத் தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் இளைஞர் ஒருவன் நீர்கொழும்பில் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

காரைநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நீர்கொழும்புப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

காரைநகர் தோப்புக் காட்டைச் சேர்ந்த குமாரவேல் பத்மகுமார் (வயது 28) என்ற [illegible]வரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மத்தியகிழக்கு நாடொன்றில் இருந்து திரும்பிய இவர் நீர்கொழும்பில் தங்கியிருந்து மேசன் தொழில் செய்துவந்ததாகக் கூறப்படுகிறது. நீர்கொழும்பு முனைக்கரை வீதியில் வசித்துவந்த இவர் நேற்றுமுன்தினம் இரவு இப்பகுதியிலுள்ள மதுபானசாலை ஒன்றினருகில் வைத்தே சுடப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்மிரேஜ் வருகை திடீரென ரத்தானது!

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தை அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் ரத்துச் செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணத்தால் இவரது பயணத் திட்டம் மாற்றப்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆர்மிரேஜ் தமது இலங்கை விஜயத்தின்போது சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்குமாறு இலங்கை அரசுத் தலைவர்களைச் சந்தித்து வலியுறுத்தவிருந்ததுடன் - எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் நடத்தத் திட்டமிட்டிருந்தார்.

இவரது பயணத் திட்டம் மாற்றபட்டுள்ளதால் இவையனைத்தும் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கத் தூதரகம் மேலும் தெரிவித்தது.

## முன்னாள் புளொட் உறுப்பினர் தெஹிவளையில் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

கொழும்பு தெஹிவளை பகுதியில் நேற்றிரவு முன்னாள் புளொட் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் இன்னொருவர் படுகாயமடைந்தார்.

வேலாயுதம் தயாள்குமார், (வயது 44) என்ற முன்னாள் புளொட் உறுப்பினரே நேற்றிரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவருடன் வந்திருந்த அவரது நண்பர் எனக் கூறப்படும் நபரொருவரும் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்

தேநீர் கடையொன்றில் தேநீர் அருந்திவிட்டு வெளியே வந்தபோதே இவர்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொருளாதார, பாதுகாப்பு உதவி குறித்து

## நாவற்குழிப் பாலமருகே

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொருளாதார, பாதுகாப்பு உதவி குறித்து

# இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு



(புதுடெல்கி)

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்று சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

இந்தியப் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார, பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகள் மற்றும் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல் ஆகியன தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமருக்கு விளக்கிக் கூறினார்.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடெல்கியில் ஹோட்டல் ஒன்றில் வைத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கைச் சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசிப்பதனால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுப்பது தொடர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாவற்குழிப் பாலமருகே மினிபஸ் தடம்புரண்டது!

## 4 பயணிகள் படுகாயம்

(சாவகச்சேரி)



முகமாலையிலிருந்து மிக வேகமாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் நாவற்குழிப் பாலத்துக்கு அருகே தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த நான்கு ப்யணிகள் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றிவந்த பஸ், மிக வேகமாக வந்து நாவற்குழிப் பாலத்தருகே உள்ள வளைவில் திருப்ப முற்பட்டபோதே வேகக் கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு அருகிலுள்ள வாய்க்கால் நீரினுள் வீழ்ந்தது.

இந்த விபத்தில் நான்கு பயணிகள் படுகாயமடைந்தனர். மீசாலையைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை இரத்தினசபாபதி, நவரட்ணம் அருந்தவமலர் (வயது 43), கொக்குவிலைச் சேர்ந்த அன்னக்கொழுந்து பேச்சியம்மா (வயது 73), செல்லம்மா (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே 13 வயதுப் பிரிவினருக்கான சங்ஸா கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## கருத்தரங்கும் செயலமர்வும்

ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் இன்றும், நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில், ஆரம்பக்கல்வி, கணித பாடத்திலுள்ள வழுக்கள் சம்பந்தமான கருத்தரங்கும், செயலமர்வும் இடம்பெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (12)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 101 ஆவது தொடர்- இன்று மாலை 6.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில், இந்துமசய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், 'திருகைவேல்' என்னும் தலைப்பில் ஆசிரியர் துரை கணேசமூர்த்தி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலய தமிழ் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில் - யாழ்.வலய தமிழ்த்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். ஸ்ரீ தயாளன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில்- காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (58)

## சமூகக்கல்வி செயலமர்வு இரத்துச் செய்யப்பட்டது.

(யாழ்ப்பாணம்)

யா.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று முதல், நாளை மறுதினம் வரை நடைபெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த தரம் 7 க்கான ஆங்கிலமொழி மூல சமூகக்கல்விப் பாடத்துக்கான செயலமர்வு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தச் செயலமர்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.


## யாழ். மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் ~ யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

### க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும் யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/ வரணி மகாவித்தியாலயம்.
03. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/ மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/ மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/ குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ ஹாட்லிக் கல்லூரி
05. யா/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/ வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/ புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
12. யா/ ஞானாசாரியார் கல்லூரி.
13. யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ இராமனாதன் கல்லூரி.
02. யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/ உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/ அருணோதயாக் கல்லூரி.
05. யா/ யூனியன் கல்லூரி.
06. யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/ விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/ வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/ மானிப்பாய் மெமோறியல்.
11. யா/ இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா∴ சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா∴ சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/ புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/ நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/ நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/ மத்திய கல்லூரி.
11. யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/ செங்குந்தா இந்துக் .கல்லூரி.
17. யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/ இந்து மகளிர் கல்லூரி.
20. யா/ இந்துக் கல்லூரி.
21. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கியின்
18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள்
இல.125A ,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
எங்களின் நோக்கம்,
உங்களின் தொழில்

Global Info IDM (PVT) LTD.
Authorized ICT Education
JAFFNA CENTER
IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2831

S.T.P 73, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம
302, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road,
Jaffna

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru
Junction, Jaffna

### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | - பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | - முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம | - ஜெயபுரம் அ.த.க. பர்டசாலை |
| 04. | பளை | - பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | - தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | - முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | - வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | - இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன | - அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 10. | இரணைமடு | - கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | - கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | - கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | -பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |



யாழ்ப்பாணத்தின் சமகாலம் நிழலாக அரங்கில்...!
அம்பலம் சஞ்சிகைக்காக..... கு. பிரபாகரனின்.....
3 நாடகங்கள்
▷ மண்மூடும் கவடுகள்
▷ கபாடம் திறபின்
▷ மேன்மக்கள்
07.11.2004 (ஞாயிறு)
யாழ் பல்கலை. கைலாசபதி கலையரங்கு
காட்சிகள் மு.ப 9.30
பி.ப 12.30
பி.ப 3.30
நுழைவு - 100/= 50/= 20/=



**விளம்பர அனுசரணை - நமது ஈழநாடு**

# இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் அரசு – புலிகள் ஒப்பந்தத்தைப் பாதிக்கும்

## பெ.சந்திரசேகரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் சம பலத்துடனே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள். எனினும், தற்பொழுது அரசாங்கம் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இருப்பது - புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்வதுடன், சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்கும் என மலையக மக்கள் முன்னணியின் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

புதுடெல்கியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இசைவாக்கச் சமஷ்டியும், வேற்றுமை முகாமைத்துவமும் என்ற கருத்தரங்கிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

புதுடெல்கியில் கடந்த இரு நாடகளாக இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் மலையக மக்கள் முன்னணின் தலைவர் பெ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் ராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உலகளாவிய ரீதியில் சுமார் 20 நாடுகளில் காணப்படுகின்ற இன முரண்பாடுகளுக்கு கனடா மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் பிரச்சினைத் தீர்வு அம்சங்கள் உதாரணமாகக் கொள்ளப்படலாமா என்பது பற்றி ஆராய்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பல பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுக்களுக்கு வரவேண்டும் எனக் கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போது, தமது கருத்தைத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியினர், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமைக்கான காரணங்களையும், இலங்கை அரசு நடைமுறைச் சமாதானச் சூழலிலும், தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த முயற்சிப்பதையும், சுட்டிக் காட்டினர். (01)

# கட்சி முரண்பாடுகளை தீர்க்க தலைமையுடன் பேசப்படும்!

## பிரதி அமைச்சர்கள் முடிவு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்காக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக பிரதி அமைச்சர்களின் கூட்டமைப்பின் தலைவர் டிரோன் பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைக்கும், ஜே.வி.பி. கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்சவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பாக, கடிதப் பரிமாற்றங்கள் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. இனிவரும் காலங்களில் கடிதப் பரிமாற்றங்கள் எதனையும் செய்வதில்லை என நாம் முடிவு செய்துள்ளோம்.

கட்சிக்குள் ஏற்படும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையுடன் நேரடியாகப் பேசுவதே சிறந்தது என முடிவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மார்க்க பிணக்குகளைத் தீர்க்க அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

## மட்டு. அம்பாறை அரசியற்துறை வேண்டுகோள்

காத்தான்குடி பிரதேசத்தில் முஸ்லிம்களிடையே உருவாகியுள்ள அமைதியற்ற சூழ்நிலை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றுமுன் தினம் மாலை அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

காத்தான்குடியில் முஸ்லிம் சமூகத்திற்கிடையே ஏற்பட்ட மார்க்க ரீதியான பிரச்சினை, அதன் பின்னர் இடம்பெற்ற துரதிஷ்டவசமான சம்பவங்கள் மிகவும் வேதனையைத் தருகின்றது.

இந்த சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் சகோதரர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறான மார்க்க ரீதியான சம்பவங்களை மேலும் வளர்த்து ஒரே இனத்துக்குள் குரோதங்களையும், பகைமை உணர்வையும் ஏற்படுத்தாது சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு ஒரு சுமூகமான இணக்கத்திற்கு வரவேண்டியது ஆரோக்கியமானதாக அமையும்.

எனவே, அனைவரும் ஒன்றிணைந்து மத ரீதியான பிணக்குகளுக்கு தீர்வு காணுமாறும், அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புடன் கேட்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டனில் சட்டவிரோதமாக இயங்கும் தமிழ் இளைஞர் குழுவைக் கட்டுப்படுத்த பொலிஸ் உதவி ஆணையாளர் நியமனம்

(லண்டன்)

லண்டனில் இயங்கிவரும் சட்டவிரோத இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக, முதன்முறையாக பொலிஸ் உதவி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

லண்டனில் உள்ள இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்களின் அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, ஸ்ரீபன் கௌஸ் என்ற பொலிஸ் உதவி ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் உதவி ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கவென, சுயாதீன ஆணைக்குழு ஒன்றையும் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் 'பிரிட்டன் கிங்ஸ்' 'வெஸ்ரோன் பூல்' 'மன் ஜெஸ்பார்' 'சவ் பெற்றிக்' போன்ற பெயர்களில் இலங்கைத் தமிழ் இளைஞர் குழுக்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழ் இளைஞர்களது சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தப்படுவதற்கான கூட்டம், உதவி ஆணையாளர் ஸ்ரீபன் கௌஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ் இளைஞர்கள் சிலரும், பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

2000 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை லண்டனில் குறிப்பிட்ட தமிழ்க் குழுக்களிடையே இடம்பெற்ற மோதல்களில் 15 பேர் வரை கொல்லப்பட்டனர்.

இதேவேளை, தமிழ் இளைஞர்களது அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக நேற்றுமுன்தினம் முக்கிய கூட்டம் ஒன்று இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், கூட்டம் இடம்பெற்ற இடத்தில் இருந்து 50 மீற்றர் தொலைவில் உள்ள வீடு ஒன்றை தமிழ் இளைஞர் குழு ஒன்று தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# ஈராக் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இலங்கையர் விரைவில் விடுவிக்கப்படுவார்

(கொழும்பு)

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை 24 மணிநேர்த்துக்குள் விடுதலை செய்யப் போவதாக கடத்தல்காரர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ள இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் 24 மணிநேரத்துக்குள் விடுவிக்கப்படுவார்களென அவர்களால் கைது செய்யப்பட்டு விடுதலையான ஈராக்கிய மொழிபெயர்ப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய மொழிபெயர்ப்பாளர் தீவிரவாதிகளால் நேற்றுமுன்தினம் மாலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தல் சிக்கலுக்கு நீதிபதியொருவரிடம் ஆலோசனை

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டிய வருடம் மற்றும் திகதி பற்றித் தோன்றியுள்ள சிக்கல் தொடர்பாக, நீதிபதி ஒருவருடைய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸநாயக்க தீர்மானித்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2006 இல் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்துள்ள அதேவேளை, எதிர்க்கட்சி அடுத்த ஆண்டு அதாவது 2005 இல் நடத்த வேண்டுமெனக் கூறியுள்ளது.

எப்படியாயினும் அரசியலமைப்பின் 30, 31 ஆம் சரத்துகளுக்கு அமைய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல், தேர்தல் ஆணையாளரால் நடத்தப்படவேண்டும் எனவும், அந்தத் தேர்தலுக்காக வேட்பாளர்களது விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியையும், தேர்தல் நடைபெறவேண்டிய திகதியையும் தேர்தல் ஆணையாளரே தீர்மானிக்க வேண்டும் என்றும் அரசியலமைப்பின் 30.5 ஆவது சரத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளருக்குரிய அதிகாரங்கள் அரசியலமைப்பு யாப்பில் தெளிவாகவே குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் திகதி குறித்து முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றமையால், இது குறித்து சட்டப் பகுப்பாய்வு மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்குமாறு தேர்தல் ஆணையாளர், நீதிபதியொருவரிடம் கோரத் தீர்மானித்துள்ளார்.

நீதிபதியிடம் இந்த ஆலோசனையைப் பெற்ற பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் நாள் மற்றும் வருடம் என்பன குறித்துத் தேர்தல் ஆணையாளர் அறிக்கை வெளியிடுவார் எனவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (தே)




சம்பள உயர்வு வழங்கக் கோரி, அரச ஊழியர் தொழிற் சங்கங்கள் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் சில காட்சிகள்.

# பிரதேச செயலர்கள் இடமாற்றம் குறித்து அமைச்சுடன் கலந்துரையாடப்படவுள்ளது

(கொழும்பு)

ஐந்து வருடத்திற்கும் அதிகமாக ஒரே இடத்திலேயே கடமையாற்றும் பிரதேச செயலர்களை, இடமாற்றுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக - மீண்டுமொருமுறை கலந்துரையாடுவதற்கு அரச பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட அனைத்து இலங்கை பிரதேச செயலர்களின் சங்க சம்மேளனத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலை அடுத்த வாரம் நிகழ்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர்களை இடமாற்றம் செய்வதற்கு எடுத்துள்ள தீர்மானம் ஏற்றுக் கொள்ளமுடியாதது எனத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் காமினி செனவிரத்ன, அமைச்சரோடு நடைபெறவுள்ள கலந்துரையாடலின்போதே, இது தொடர்பான காரணங்களையும் தெரியப்படுத்தப் போவதாகக் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது நீதியான முடிவுகள் எடுக்கப்படாது விட்டால், இடமாற்ற நடவடிக்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் செனவிரத்ன தெரிவித்தார்.

பிரதேச செயலர்களை இடம் மாற்றுவதென எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டாமெனக் கோரி - அரச, பொது நிர்வாக அமைச்சுக்கும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் கடிதங்கள் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது, நாடுமுழுவதும் 308 பிரதேச செயலர்கள் கடமையாற்றுவதாகவும் அவர்களில் 150 பேருக்கு இடமாற்றங்கள் வழங்குவதற்கு அமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# மும்பை டெஸ்ட் முதல் இனிங்ஸில் இந்திய அணி 104, அவுஸ்ரேலியா 203




(மும்பை)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான கடைசி டெஸ்ட் போட்டியில் நேற்று முதல் இனிங்ஸில் இந்திய அணி 104 ஓட்டங்களுக்கும் அவுஸ்ரேலிய அணி 203 ஓட்டங்களுக்கும் சகல விக்கெட்டுக் களையும் இழந்தன.

நேற்றுமுன்தினம் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டதால் இந்திய அணி 2 விக் கெட் இழப்புக்கு 22 ஓட்டங்கள் என்ற நிலை யில் நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பித்தது.

ட்ராவிட் 9 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் 2 ஓட்டங்களுடனும் நேற்று துடுப்பெடுத்தாட ஆரம்பித்தனர். அவுஸ்ரேலியத் தரப்பில் மக்ரா தனது பந்துவீச்சை ஆரம்பித்தார். இவரது நேற்றைய முதலாவது ஓவர் பந்து வீச்சு நிறைவடைய அடுத்து ஜிலெஸ்பி வந் தார். இவரது பந்துவீச்சில் 3 ஓட்டங்களைப் பெற்ற சச்சின் அடுத்த பந்தில் கில்கிறிஸ் டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறி னார்.

இவரின்பின் லக்ஷ்மன் வந்தார். இவரும் 10 பந்துக்ளை சந்தித்து ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் ஜிலெஸ்பியின் பந்தில், சச்சின் எவ்வாறு ஆட்டமிழந்தாரோ அவ்வாறே கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமி ழந்தார். இதன்பின்னர் கை.்.வ் வந்தார். அவரும் ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவ்வாறே இந்திய வீரர்களை அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்கள் தமது திறமையான பந்து வீச்சினால் பெவிலியனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர். இறுதியில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இந்திய அணியில் இறுதிவரை ஆட்டமி ழக்காத ராவிட் 31 ஓட்டங்களையும், மற்றை யவர்களான கும்ளே 16, ஹர்பஜன் சிங் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

அவுஸ்ரேலிய அணி சார்பில் மெக்ரா 1, ஜிலெஸ்பி 4, கஸ்பரோவிச் 2, மற்றும்



ஷேன் வோனுக்குப் பதிலாக நேற்று புதிதாக களமிறக்கப்பட்ட சுழற்பந்து வீச்சாளரான கூரிச் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணிக்கு ஆரம்பம் முதலே இந்திய அணியின் மூன்று சுழற்பந்து வீச்சாளர்களும் பாரிய அச்சுறுத்தலாக விளங்கினர்.

இந்தவகையில் அவுஸ்ரேலிய அணி 17 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அந்த அணி முதலாவது விக்கெட்டை இழந்தது. இதில் லாங்கர் 12 ஓட்டங்களைப் பெற்றிருக் கையில் சகீர்கானின் பந்து வீச்சில் ராவிட்டி டம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் பொண்டிங் 11 ஓட்டங்க ளில் கும்ளேயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையிலும், ஹைடன் 35 ஓட்டங்களில் முரளி கார்த்திக்கின் பந்துவீச்சிலும், கட்ரிச் 7 ஓட்டங் களில் கும்ளேயின் பந்து வீச்சில் கை.்.வ்விடம் பிடிகொடுத்தும் ஆட்ட மிழந்தனர்.

விக்கெட்டுக்கள் ஒரு பக்கமாக வீழ்ந்து கொண்டிருந்தாலும் மறுமுனையில் மார்ட்டின் தனது நிலையை உறுதியாகவே வைத்தி ருந்தார்.

இதன்பின் .மார்ட்டினுடன் கிளார்க் இணைந்தார். இவர்கள் இருவரும் இணைந்து திடீரென அவுஸ்ரேலிய ஓட்ட எண்ணிக் கையை உயர்த்தினர். இதில் கிளார்க் 2 சிக்ஸர் உட்பட 17 ஓட்டங்களைப் பெற்றிருக் கையில் கும்ளேயின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக் ஸ்ரம்ப் செய்ததன் மூலம் ஆட்டமிழந்தார்.

இவரது ஆட்டமிழப்பை அடுத்து கில்கி றிஸ்ட் வந்தார். இவர் ஒருநாள் போட்டிக ளைப் போல் அடித்து ஆடினார். 18 பந்து



களில் 1 சிக்ஸர் 3 பவுண்டரிகள் அடங்க லாக 26 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் கார்த்திக்கின் பந்து வீச்சில் கை.்.வ்விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவரின் பின் ஜிலெஸ்பி 2, கூரிச் ஓட்ட மெதுவும் பெறாமலும், மார்ட்டின் 55, கஸ்ப ரோவிச் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந் தனர். அவுஸ்ரேலிய அணி 203 ஓட்டங்க ளைப் பெற்றது.

பந்துவீச்சில் கும்ளே 5, கார்த்திக் 4, சகீர்கான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி னர்.

இதன்பின் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்றைய ஆட்ட நேரமுடிவில் விக்கெட் இழப்பின்றி 5 ஓட்டங் களைப் பெற்றிருந்தது. இதில் ஷேவாக் 4, கம்பீர் ஒரு ஓட்டத்தினைப் பெற்றிருந்தனர்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமி ழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவு நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு நெல் லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத் தில் நடைபெறவுள்ளன.

இதில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட் டுக்கழகமும், டையமன்ஸ் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து தாவடி அம்பாள் விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இதன் அறிமுக விழாவின்போது யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப் பாளர் மாதுளன், வடமராட்சி அரசியற்துறைப் பொறுபபாளர் இ.தயா, வல்வெட்டித்துறை அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் மற்றும் உதைபந்தாட்ட லீக் தலைவர், செயலாளர் ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர். (12)

## மாஸ்டர்ஸ் ரெனிஸ் 3வது சுற்றில் ஹெவிட்



(பாரிஸ்)

மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடரில் அவுஸ் ரேலியாவின் ஹெவிட் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் ஆண்களுக் கான மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடர் நடை பெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் கடந்த செவ் வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் இரண்டாம் நிலை வீரரான ஹெவிட், உலகின் முதற்தர ஜூனியர் வீரரான பிரான் சின் கேல் மான்பில்லை எதிர்த்து விளையா டினார். பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் உடனான காதல் முறிவுக்குப் பிறகு முதல் முறையாக ஹெவிட் களமிறங்குவதால் ரசிகர்கள் இடையே இப்போட்டி அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

இதில் ஹெவிட் 6-3, 7-6 என்ற நேர் செட்களில் எளிதில் வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில், ரொமேனியாவின் ஆந்த்ரே பாவல் 7-6, 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் மர்டி பிஸ்சையும், குரோ ஸியாவின் இவான் லிஜுபிக் 6-3, 7-6 என்ற செட்களில் பிரான்ஸின் அர்னாட் கிளிமென் டையும் வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

## இந்தியப் பயணத்திலிருந்து நிக்கி போயே விலகினார்



இந்திய பொலிஸ் விசார ணைக்கு பயந்து அணியில் இருந்து விலக நிக்கி போயே முடிவுசெய்துள்ளார்.

தென்ஆபிரிக்க கிரிக்கெட் அணி இந்த. மாத இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள் ளது. இந்தப் போட்டிக்கான தென்ஆபிரிக்க அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு குரேஞ்ஞே தலைமையிலான தென்ஆபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தது. அப் போது குரேஞ்ஞே உள்ளிட்ட 4 தென் ஆபி ரிக்க வீரர்கள் சூதாட்ட குற்றச்சாட்டில் சிக் கினர். இது தொடர்பாக டெல்கி பொலிஸ் வழக்குப் பதிவுசெய்தது.

குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்ட வீரர்களிடம் விசாரணை நடத்துவதற்குள் அவர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிவிட்டனர். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட விமான விபத்தில் குரேஞ்ஞே மரணம் அடைந்துவிட் டார். இதனால் அவர் மீதான விசாரணைகள் அனைத்துக்கும் முடிவு கட்டப்பட்டுவிட்டது.

இதற்கிடையே சூதாட்ட குற்றச்சாட்டில் சிக்கிய கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர் தென் ஆபிரிக்க அணியின் முன்னணி வீரர் கள். டெல்கி பொலிஸ் விசாரணைக்குப் பயந்து இந்திய பயணத்திலிருந்து கிப்ஸ் ஏற்கனவே விலகிவிட்டார்.

போயே தென்ஆபிரிக்கா அணியின் துணைகப்டனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். எனவே அவரிடம் கண்டிப்பாக விசாரணை நடத்தப்படும் என்று இந்திய பொலிஸ் தரப் பில் கூறப்பட்டது. இதை உறுதி செய்வதற் காக தென்ஆபிரிக்க தூதரக துணை அதி காரி டெஸ் மென்ட் டெல்கி பொலிஸ் கமிஷ னர் கே.கே.போலை நேற்று முன்தினம் சந்தித் தார்.

இந்தச் சந்திப்பின்போது சூதாட்ட விசா ரணை தொடர்பாக இருவரும் நீண்ட நேரம் விவாதித்தனர். அப்போது போயே விவகாரம் குறித்தும் கேள்வி எழுந்துள்ளது. இதற்கு கே.கே.போல் பதில் அளிக்கையில் போயே கைது செய்யப்படமாட்டார் என்ற உறுதி மொழியை நான் கொடுக்க முடியாது என்றார்.

எனவே போயே இந்தியா வந்தால் அவரை கைதுசெய்ய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இதையடுத்து இந்தியப் பயணத்தில் இருந்து விலகபோயே முடிவு செய்துள்ளதாக தென்ஆபிரிக்க கிரிக் கட் வட்டாரங்களில் பரபரப்பான பேச்சு நிலவு கிறது.

## மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இறுதி நிகழ்வும் பரிசளிப்பும்

வட்வெட்டித்துறை கழுகுகள் விளையாட் டுக்கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் நாளை மாலை 3 மணியளவில் கழுகுகள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள் ளன.

கழுகுகள் விளையாட்டுக்கழக கனடா கிளைக்குழுத் தலைவர் பா.குமரதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி இ.உருத் திராவும், சிறப்பு விருந்தினர்களாக வல்வெட் டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி க. மயிலேறும் பெருமாள், பருத்தித்துறை பிரதேச செயலர் சு. வசந்தகுமார் ஆகியோ ருடன், சட்டத்தரணியும் பதில் நீதவானுமான உ.விஜயராணி, யாழ்.மவாட்ட விளையாட் டுத்துறைப் பொறுப்பாளர் த.மாதுளன் ஆகி யோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வின் இறுதிப் போட்டியில் கழுகுகள் அணியை எதிர்த்து ஸ்பேஸ் அணி மோதவுள்ளது.




## மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு புதிய துணைப் பயிற்சியாளர்

(பிரிட்ஜ்டவுன்)

பெனட் கிங்கை தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துணைப் பயிற்சியாளராக அவுஸ்ரேலியாவின் டேவிட் மோரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டெஸ்ட் தொடர்களில் பெற்ற மோசமான தோல்வியின் காரணமாக மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான கஸ் லோகி மாற்றப்பட்டார். இவருக்குப் பதிலாக அவுஸ்ரேலியாவின் பெனட் கிங் புதிய பயிற்சியாளராக சமீபத்தில் அறிவிக்கப்பட் டார்.

தற்போது துணைப் பயிற்சியாளராக டேவிட் மோரே தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரும் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்தவரே. கடந்த ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற ஜூனியர் உலகக் கிண்ணப் போட்டியில் இவர் அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாள ராக இருந்தவர்.

மோரே பயிற்சி அளிப்பதில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். இவர் அணியின் முன்னேற்றத்திற்கு மிகவும் உதவியாக இருப் பார் என்கிறது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக் கெட் சபை. ஐ.சி.சி. சம்பியன்ஸ் ரொபி தொடருக்குப் பிறகு மூன்றுமாத ஓய்வில் உள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

# வடமராட்சி கிழக்கு மக்களின் முக்கிய பிரச்சினைக்கு தீர்வு

## குளிரூட்டி அறை அடிக்கல் விழாவில் உதவி அரச அதிபர்

வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் இடம் பெயர்வதற்கு முன்னரும், மீளக் குடிய மர்ந்த பின்னரும் தாம் பிடிக்கும் கடலுணவுப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதன்மூலம் இந்தப் பிரதேச மக்கள் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவைச் சந்தித்தனர்.

இதற்குப் பரிகாரம் காணும் முகமாக இந்தக் குளிரூட்டி அறை இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்படுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.ரீ.ஜெயசீலன் குளிரூட்டி அறைக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மு.தங்கவேலு தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் -

கடந்தகால போர அனர்த்தங்களால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தில் வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், மற்றும் அரச அலுவலகங்கள் புதிதாக அமைக்கப்படவேண்டிய பாரிய வேலைத்திட்டங்கள் பல உண்டு.

இந்தப் பிரதேச அபிவிருத்திப் பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ள ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், அரச, அரசசார்பற்ற நிதி நிறுவனங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நிதி உதவிகள் பெற்று, குறுகிய காலத்தில் இந்தப் பிரதேசம் வளர்ச்சியடைய சகல முயற்சிகளும் மேற்கொள்வதாகக் கூறினார்.

உலக விவசாய ஸ்தாபன நிதி உதவியுடன், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு வழங்கப்பட்ட ரூபா 20 லட்சம் பெறுமதியான குளிரூட்டி அறைக் கட்டட அடிக்கல்லை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.ரீ.ஜெயசீலன், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வ.எஸ்.தயாகராசா, ஜீ.ரி.இசற் தாளையடி உப பணிமனைப் பொறுப்பாளர், ஆழியவளை திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் டொக்டர் ஈழவாணி, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புக் குழுச் செயலாளர் மூ.வ.தவராசா, வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்த புவனச்சந்திரன் ஆகியோர் நாட்டி வைத்தனர்.

இந்தக் குளிரூட்டியறை அமைக்கப்படுவதன் மூலம், இந்தப் பிரதேச மக்கள் தாம் பிடிக்கும் கடலுணவுப் பொருட்களைச் சந்தைப்படுத்திய தன் பின்னர் மிகுதியைப் பழுதாகாமல் பாதுகாத்து வைத்து, பிறிதொரு நாளில் சந்தைப்படுத்துவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (21)




அண்மையில் ச.முருகானந்தனின் சிறுகதைத் தொகுதியான 'இது எங்கள் தேசம்' நூல் தமிழ்ச்சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டபோது நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

# திருத்தப்படாத தீவக வீதிகளால் தொடரும் போக்குவரத்து அவலம்

தீவகத்தின் பல்வேறு வீதிகளும் கடும் சேதமடைந்துள்ள நிலையில் தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக தீவக மக்கள் போக்குவரத்தில் பெரும் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

தற்போது பெய்து வரும் கடும் மழையின் காரணமாக இங்குள்ள வீதிகளில் காணப்படும் பாரிய குழிகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ள நிலையில், இந்த வீதியால் பயணிப்பவர்கள் கடும் சிரமங்களை எதிர் கொள்வதுடன், வாகனங்களும் பழுதடைந்து விபத்துக்குள்ளாகியும் வருகின்றன.

இது குறித்து சாரதிகள் கருத்துத் தெரிவிக்கையில் -

பருவ மழையின் முன் தாம் தரவைகளையே பயன்படுத்தி வந்ததாகவும், தற்போது மழை காரணமாக தரவைகள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ள நிலையில், இந்த வீதியில் பயணிப்பதால், நீண்டநேரத்தை செலவிட வேண்டியுள்ளதாகவும், வாகனங்கள் பழுதடைந்து விடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இங்குள்ள முக்கிய சந்திகளில்கூட பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாத நிலையில், மக்கள் பஸ்ஸுக்காகக் கடும் மழையின் மத்தியில் நீண்டநேரம் காத்து நிற்பதையும் காணமுடிகிறது. (99)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்களுக்கான கூட்டம் -

எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது என, கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (24)

# சின்னஞ்சிறு செய்திகள்

### இராணுவத்தினரின் உதவியுடன் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

பொது மக்கள் எவரும் செல்ல முடியாத உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாகிய தென்மராட்சியின் தனங்களப்பு, மறவன்புலவுப் பகுதிகளில் பெருமளவு கட்டாக்காலி நாய்கள் இராணுவ முகாம்களில் இருப்பதாகவும், அவற்றைப் பிடித்து அழிப்பதற்கு இராணுவத்தால் நகரசபைச் செயலாளரின் உதவி கோரப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் காணப் படும் நாய்கள் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டுக் கொண்டு வந்து, நகரசபை அலுவலகத்திடம் ஒப்படைப்பதன் பின்னர் நகரசபை அலுவலகத்தால் அந்த நாய்கள் அழிக்கப்பட்டன. (29)

### பாடசாலை அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் அடுத்த வருடம் ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அனுமதி பெற விரும்பும் மாணவர்களின் பெற்றோர் உடனடியாக பாடசாலை சென்று விண்ணப்பப்படிவத்தைப்பெற்று, பூர்த்தி செய்து எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் அதிபரிடம் ஒப்படைக்கவும். ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பியவர்களும் குறித்த நாளில் சமூகம் தருமாறு அதிபர் கே.இராசநாயகம் அறிவித்துள்ளார். (101)

### காணி உறுதி பத்திரம் வழங்கல்

மீசாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை மீசாலை வடக்கு கிராம சேவகருடைய அலுவலகத்தில் தென்மராட்சி பிரதேச செயலாளர் செ.ஸ்ரீனிவாசனால் வழங்கப்பட்டது. (25)

### சட்டவிரோத மின் பாவனையால் வேலணையில் அடிக்கடி மின்தடை

சட்டவிரோத மின் பாவனை காரணமாக வேலணைப் பிரதேசத்தில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்துக்கு பகுதி நேர மின்சாரமே வழங்கப்பட்டுவருகின்றபோதிலும், இந்த மின்சாரம் மிகவும் வலுக்குறைந்ததாகக் காணப்படுகிறது.

குறிப்பாக புளியங்கூடல் பகுதியிலேயே இந்த நிலை காணப்படுகிறது.

இந்தப் பகுதியில் நிலவும் சட்டவிரோத மின்பாவனையே காரணம் எனச் சுட்டிக்காட்டுவதுடன், இதன் காரணமாக மின் தடையையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (99)

### பற்றைகள் வெட்டப்பட்டன

சுன்னாகம் மாகியப்பிட்டி வீதி பற்றைகளால் சூழப்பட்டு, பல வருடங்களாக , போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தது. பற்றைக்குள் முட்கள், பாரிய மரக்கிளை என்பன வீதி அபிவிருத்தி அதிகார சபையால் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன. (101)

### அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

வடமராட்சி கிழக்கிலுள்ள சகல கிராம சேவகர்கள் பிரிவுகளும், அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஜி.ரி.இசற் நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடமராட்சி கிழக்கு சகல கிராம சேவகர் அலுவலகங்களும் 5 -10 ஆண்டு வரையான கிராம சேவகர் பிரிவிலுள்ள அபிவிருத்தித் திட்டங்களை ஜி.ரி இசற் நிறுவனத்திடம் அண்மையில் கையளிக்கப்பட்டதாக மருதங்கேணி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# மாவீரர் நாளை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள்

யாழ். நல்லூர் கோட்டத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளை சிறப்பாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை நல்லூர் கோட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஏற்பாடுகளில் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ரீதியாக கருத்துரைகளை வழங்கி வருவதுடன், கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப்பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். நல்லூர் கோட்டத்தில் பகுதி பகுதியாக மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் - ஏற்பாட்டுக் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தக் குழுவினர் - வீடுகள், வர்த்தக நிலையங்கள் தோறும் சென்று, தமிழீழ தேசிய மாவீரர் நாள் தொடர்பான கருத்துரைகள் வழங்கி வருகின்றனர். (63)

# ஹயேஸ்வான் மோதி இருவருக்குக் காயம்

ஆனைக்கோட்டை, காக்கைதீவு வீதியால் சைக்கிளில் சென்ற இருவரை கையேஸ்வான் ஒன்று மோதியதில், இருவரும் தூக்கி வீசப்பட்டு, படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிய ளவில் நடைபெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த பொம்மைவெளியைச் சேர்ந்த பாபு (வயது 21), சோதிலிங்கம் வர்ணன் (வயது 16) ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். (206)

# வாகன வரி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு பற்றுச்சீட்டு

தென்மராட்சிப் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் 2004 ஆம் ஆண்டுக்குரிய மோட்டார் சைக்கிள்களுக்கான வரி அனுமதிப் பத்திரம் முடிவடைந்துள்ளதால், தற்போது வரி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பிப்பவர்களுக்குப் பற்றுச் சீட்டு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வரி அனுமதிப் பத்திரப் புத்தகங்கள் முடிவடைந்துவிட்டதாகவும், இனி 2005 ஆம் ஆண்டுக்குரிய வரி அனுமதிப் பத்திரப் புத்தகங்கமே வழங்கப்படும் எனவும் அறிய முடிகிறது.

எதிர்பார்த்ததைவிட, வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே இந்தக் தட்டுப்பாட்டுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இதேவேளை, வாகன உடைமை மாற்றுப்படிவங்களும் யாழ். மாவட்டத்தில் பெறமுடியாதிருப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (29)

# கச்சாய் பகுதியிலிருந்து கண்ணிவெடி மீட்பு

கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய வளவிலிருந்து பாரிய சக்தி வாய்ந்த வாகனக் கண்ணிவெடி ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது.

இந்தச் சக்திவாய்ந்த வெடிகுண்டு இருந்த பகுதியூடாகவே, கட்டடங்கள் கட்டுவதற்கான வாகனங்கள் போக்குவரத்து செய்து வந்தன.

இந்த வாகனங்கள் சென்று வந்த, வெடிபொருள் இருந்த இடத்துக்கும் ஒரு அடி இடைவெளி இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சக்திவாய்ந்த கண்ணி வெடி கண்டுபிடிக்கப்பட்டதால், பாரிய சேதம் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : பு.கயூரி
முகவரி : புன்னை நீராவி, விஸ்வமடு.

இரண்டாவது அகவையில்



பெயர் : வ.விதுர்ஷா
முகவரி : சரஸ்வதி வாசம், வதிரி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்



# சிநேகிதியே

# நம்பிக்கை வை



ஒரு மனிதன் தன்னைப்பற்றி எப்படி எண்ணுகிறானோ, அப்படியே உருவாகின்றான் என்பது மனோதத்துவ உண்மை. நல்லதே நடக்கும் என்று நம்புவது ஒரு அருமையான வாழ்க்கைக் கோட்பாடு. நடந்து கொண்டிருந்தவற்றைப் பற்றி எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருப்பதும், நடக்கப் போவதைப் பற்றிப் பாதகமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதும் எந்த விதத்திலும் எமக்கு நன்மையளிக்கப் போவதில்லை.

நல்லதையே நினையுங்கள். நல்லதையே செய்யுங்கள். உங்கள் வாழ்வில் நடக்கும் அனைத்தும் நன்றாகவே நடக்கும் என்று சிந்தியுங்கள். அந்த எண்ணம் வாழ்வை வளம்படுத்தும். இதையே பகவத்கீதையும் சொல்கிறது.

*எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.*
*எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.*
*எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்.*

கடந்த காலம் மீண்டும் வரப்போவதில்லை. நம் கைவசம் உள்ளது நிகழ்காலம் மட்டுமே. அதை நல்லபடி சிந்தியுங்கள். எதிர்காலம் எப்படி அமையப் போகிறதோ என்று மனதை அலையவிடாமல் அது நன்றாகவே அமையும் என்று உறுதியாக நம்புங்கள்.

இந்த நம்பிக்கை மிகுந்த சக்தி வாய்ந்தது. கடவுள் எனக்கு எப்போதும் எனக்கு நல்லவழியே காட்டுவார் என்று இறைவனிடம் நம்பிக்கை கொள்ளும்போது, கிடைக்கும் வெற்றிகூட இத்தகையதே. வழி எதுவானாலும், நல்லதே நடக்கும் என்று நம்புகின்றபோது, அந்த நம்பிக்கை நல்லது நடப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கிறது. நல்லதே நடக்கும் என்று நினைப்பது கண்மூடித்தனமான நம்பிக்கை அல்ல. மனித சக்தியை வெளிப்படுத்துகின்ற அருமையான உபாயம் அது.

எனவேதான் குழந்தைகளாக இருக்கும்போதே நல்ல இலட்சிய எண்ணங்களை உருவாக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். குழந்தைகள் சிறுவயதில் காண்கின்ற கனவு – அவர்களின் சாதனைகளாக நிறைவேறியிருக்கின்றன. வாழ்க்கையில் வெற்றிபெற்ற பலருடைய வாழ்வில் இதை நாம் தரிசிக்கமுடியும்.

நம்முடைய எண்ணங்களுக்கு ஏற்றபடிதான் நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் உருவாகின்றன. ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது என்று நம்புகின்றவன், சுபிட்சமான பிரகாசமான எதிர்காலத்தைப் பெறுகிறான். உங்கள் மனதை அவ நம்பிக்கையான எண்ணங்கள் சூழ்கின்றபோது, வெற்றி உங்களைவிட்டுத் தொலைதூரம் சென்றுவிடுகின்றது. நல்லதே நடக்கும் என்று எண்ணி, எதிர்பார்த்து ஆக்கபூர்வமான சிந்தனைகளை நீங்களே உருவாக்கிக் கொள்கின்றபோது, உங்களைச் சுற்றி ஒரு சாதகமான சூழ்நிலையையே நீங்கள் உருவாக்கிக் கொண்டுவிடுகிறீர்கள்.

அண்மைக் காலத்தில் வெகு பிரபலமாகி ஒலிக்கின்ற 'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே' என்ற சினிமாப் பாடலும் இந்தக் கருத்தை வலியுறுத்திச் செல்கிறது. இனிய இசைப் பாடல் மூலம் நல்ல கருத்தைப் பதிய வைத்த இந்தப் படைப்பாளிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே! சினிமாப் பாடல் என்று சொன்னாலும் இன்றைய ஆபாச அர்த்தங்கள் நிறைந்த சினிமாப் பாடல்கள் நினைவுக்கு வருகின்றன.

அண்மைக்கால சினிமாப் பாடல்கள் பல, அதன் வரிகளின் மூலமும் பாடும் விதத்திலும் மனதை மிக மோசமாகத் தப்பான திசைக்கு இட்டுச் செல்கிறது. இது வேதனைக்குரிய விடயமாகும். சிறுபிள்ளைகளின் வாயில்கூட இப்படியான பாடல்களின் மோசமான வரிகள் ஒலிக்கும்போது, அவர்களது மனமும் படிப்படியாகக் கெட்டுப் போகிறது.

சினிமாக்காரர்கள் பழியை ரசிகர்கள் மேலே போடுவது அபத்தமானது. ரசிகர்கள் விரும்புவதால்தான், இப்படியான பாடல்களைத் தருகிறோம் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இன்று மிகவும் நம்பிக்கையூட்டும் பாடலான "ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே" என்ற பாடல் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று பட்டி தொட்டி எல்லாம் ஒலிக்கும் போது ஆபாச சினிமாக்காரர்களின் கூற்று எவ்வளவு தவறானது என்று தெரிகிறதல்லவா? சினிமாக்காரர்களே சமுதாயத்தைப் பற்றி ஏன் பிள்ளைகளைப் பற்றியாவது கொஞ்சமாவது சிந்தித்துச் செயற்படலாம்தானே.

ஒவ்வொரு பூக்களுமே பாடலில் வருகின்ற ஒவ்வொரு வரிகளும் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. சில நல்ல மந்திரங்களை நாம் தினமும் காலையில் கேட்பதுபோல இப்படியான பாடல்களைத் தினமும் நாம் கேட்க வேண்டும். பட்டுக்கோட்டை கலியாண சுந்தரத்தின் பல பாடல்கள் இந்த வகையில் எழுச்சிகொள்ளவைப்பன. 'திருடாதே பாப்பா திருடாதே', 'தூங்காதே தம்பி தூங்காதே' போன்ற பாடல்களையும் இவருக்குப் பின்னர் வந்த பாடல்களில் 'வெற்றி வேண்டுமா போட்டு பாரடா எதிர் நீச்சல்', 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கு' இன்னும் இப்படியான பல பாடல்களைக்கூட உதாரணமாகக் கூற முடியும்.

சமுதாயத்தைச் சீர்திருத்தக்கூடிய நல்ல ஒரு ஊடகமான சினிமா – இன்று திசைமாறி எதிர்விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. இவைதவிர

வாழ்க்கையில் வெற்றிபெற நாம் நல்ல நிலையில் சிந்தித்துச் செயற்படுவதுடன், நன்மை பயக்கக்கூடிய விடயங்களிலேயே ஈடுபடவேண்டும். நல்ல கலை இலக்கிய ஊடக விடயங்களுடன் தொடர்பு இருக்கவேண்டும்.

ஒரு காரியத்தில் வெற்றிபெற வேண்டுமாயின், முதலில் செய்யவேண்டியது உங்களில் நீங்கள் நம்பிக்கை கொள்வதேயாகும். நம்பிக்கையே செயற்பாட்டில் ஆர்வத்தையும், செயற்திறமையையும் ஏற்படுத்துகிறது.

இந்த நம்பிக்கை ஏற்பட நல்ல விடயங்களை மனதில் ஆழமாகப் பதிய வைக்கவேண்டும்.

எந்த ஒரு நிகழ்வு மனித மனத்தில் ஆழமாகப் பதிகின்றதோ, அதில் அவர்களுக்கு இயல்பான ஈடுபாடு ஏற்பட்டுவிடுகிறது. நாம் உருவாக்கிக் கொள்கின்ற எண்ணங்களே எவ்வளவு வன்மையாகச் செயற்படுகிறது என்பது, பலரது இலட்சிய வாழ்விலிருந்து எமக்குப் புரிகிறதல்லவா?

நல்லதே நடக்கும் என்று நம்புகிறபோது, நல்லதைச் செய்கின்ற ஆர்வம் பிறக்கிறது. எண்ணம், சொல், செயல் ஆகிய அனைத்தும் நல்லதே நடக்கும் என்று நம்புகிறபோது நல்ல காரியங்கள் நடக்கத் தொடங்குகின்றன.

எதிர்காலம் பற்றிய எமது கனவுகள் கூட ஆக்கபூர்வமாக அமையவேண்டும். எண்ணங்களே இலட்சியக் கனவுகளை உருவாக்குகின்றன. வாழ்க்கையை நம்பிக்கையுடன் நம்பித் துணிகின்ற போது, அவர்களுடைய முழுச் சக்தியும் வெளிப்படுகிறது.

இதனால் வெற்றி இலக்கு எளிதில் கிட்டி விடுகிறது. ✳

# அன்புக் கட்டளைகள்

✳ ஏதாவது காரியத்தைத் தொடங்குமுன் நான் செய்வது சரி. என் செய்கை யாரையும் புண்படுத்தாது. எனக்கு நன்மை தரவில்லையென்றாலும், அடுத்தவருக்குத் தீமை தராது என்பதை உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமின்றி உறுதிப்படுத்தியபின் செய்யத்தொடங்குங்கள். அந்தக் காரியத்துக்காக இறைவன் துணை நிற்பான்.

✳ அடுத்தவர்களிடம் காணும் நல்ல விடயங்களையும், அவர்களது சாதனைகளையும் மனம் திறந்து பாராட்டுங்கள். உங்கள் மனம் கடல்போல் விரிவதை உணர்வீர்கள்.

✳ அன்பு - பாசம் - நட்பு இவைகளுக்கு மட்டுமே அடிபணியுங்கள். இவைகளுக்காக வணங்கிய தலை என்றுமே நிமிர்ந்து நிற்கும்.

✳ கவலைகளுக்குச் சிறந்த மருந்து - சிரிப்பு. நடிப்புக்கு சிரிக்காமல் மனம் விட்டுச் சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

✳ மனச்சாட்சியைவிட உற்ற தோழன் வேறு இல்லை. அடுத்தவர்களுக்குப் பயந்து செயலாற்றாது, உங்கள் மனச்சாட்சிக்கு மட்டும் பயப்படுங்கள். இல்லையேல் நீங்கள் நீங்களாக இருக்கமுடியாது.

✳ உங்களோடு உரையாடுபவர்களின் முகபாவத்திலிருந்தும், அவர் கூறும் ஒன்றிரண்டு வார்த் தைகளிலிருந்தும் அவர் மனதை வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எந்தளவு இவரை நம்பலாம் என்று தெரிந்து, அதற்கேற்றாற்போல் நம் எல்லைக் கோடுகளை வரைந்துகொள்ள வேண்டும்.

✳ உலகைவென்று காலடியில் கிடந்த ஒரு நல்ல ஆயுதம் அன்பு. இந்த ஆயுதத்தை எல்லோர் மீதும் பிரயோகியுங்கள்.

✳ உங்கள் மனக் கஷ்டங்களையோ அல்லது தனிப்பட்ட விடயங்களையோ யாரையும் நம்பி எடுத்த எடுப்பில் கூறி விடாதீர்கள். கேட்பவர்களில் 50 பேர் மனதுக்குள் ரசித்துக் கொள்வர். மீதிப்பேர் சலித்துக் கொள்வர்.

✳ கோபம் வீரத்துக்கு அழகு என்று எண்ணாதீர்கள். மனோதிடம் அற்றவனும், தாழ்வு மனப்பான்மை கொண்டவனும், தவறுகள் செய்பவனும் தங்கள் குறைகளை மறைத்துத் தங்களைக் காத்துக் கொள்ள எடுக்கும் ஆயுதமே இந்தக் கோபம்.

✳ இறைவன் இருக்க விரும்புவது போட்டி, பொறாமை, வெறுப்பு இந்த மூன்றும் அற்ற இடத்தை[illegible] மூன்றுக்கும் மனதில் இடம் தராமல் மனதைத் தூய்மையாக வைத்திருங்கள்.

✳ உங்களிடம் மிகவும் நெருக்கமாகப் பழகுபவர்களிடமிருந்து முடிந்தவரை பொருள், பணம், உதவி என்பவற்றை எதிர்பாராமல் இருங்கள்.

✳ எல்லோருக்கும் உங்களைப் பிடிக்கவேண்டும் என்பதற்காக நடக்காத ஒரு விடயத்துக்காக உங்கள் நேரத்தை வீண் செலவு செய்யாதீர்கள். உங்களோடு பழகுபவர்களில் உங்களைப் பிடித்துப் பழகுபவர்களைவிடப் பிடிப்பதாக நடிப்பவர்கள்தான் அதிகம். ☆

# ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!

ஒவ்வொரு நாளும் வீட்டில் இருந்து வெளியே செல்லும்போது எந்தக் காரணமாக இருந்தாலும் சரி, இரண்டு நிமிடம் நின்று இன்று எதற்காக வெளியே செல்கிறோம் என்பதைச் சிந்தித்து, மீண்டும் ஞாபகப்படுத்துவதால், வெளியே செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தும் ஒழுங்காக நிறைவுபெற வழிவகுக்கும். அதாவது இன்றைக்கு முழுவதும் மகிழ்ச்சியான நாளாக இருக்கவேண்டும். இன்றைக்கு சுறு சுறுப்பாகவும் புத்துணர்சியோடும் இருக்கவேண்டும். மற்றவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பேன் என்று எமக்குள்ளே அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு வந்தால் வாழ்வு சந்தோஷமாக இருக்கும்.

இன்றைய நாள் கழிந்து போயின், எப்படிக் கழிந்தது என்று வீட்டுக்குப் போனதும் பத்து நிமடம் திரும்பி மீட்டுப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் என்ன பிழை விட்டோம், எதை தவறவிட்டோம், யார் யாரோடு எல்லாம் கோபப்பட்டோம், ஏன் கோபப்பட்டோம் என்று எமக்கு நாமே சுய விமர்சனம் செய்து பார்க்கலாம்.



ஒரு விடயத்தை மனதுக்குள் போட்டு, மனதை இறுக்கமாக்கிவிட்டு, பத்து நாள் வரைக்கும் அந்த மன உளைச்சலோடு இருந்து, அதற்குப் பிறகு பத்தாவது நாள் அதற்கான தீர்வைப் பற்றி யோசிப் பதைவிட, அந்தந்தப் பிரச்சினைக்கு அன்றைக்கே ஒரு தீர்வை ஏற்படுத்துவதுதான் சரியானது. இதனால் மறுநாளே மனது இலகுவாகி, புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

*சின்னச் சின்ன* வேலைகளுக்கெல்லாம் பிறர் உதவியை நாடாது எங்களால் செய்ய முடிந்த வேலையை நாங்களே செய்யவேண்டும். இதனால் இரண்டு வித மான நன்மைகளைப்பெற முடியும். அதாவது – உத விக்கு ஒருவரைப் பார்த்துக்கொள்ள வேண்டிய தேவை இருக்காது. மற்றையது – உடலில் எந்தவித நோயும் அணுகாமல் பலமாக இருக்கும். இதனால் சுறுசுறுப்பாக இருக்கமுடியும்.

தாழ்வு மனப்பான்மை எங்களின் மீது வந்தால், சுறுசுறுப்பாக இருக்க முடியாது போய்விடும். பொதுவாக ஒரு கணவன் முன்னேறும்போது பெரும்பா லும் அந்த மனைவிக்கு தாழ்வு மனப்பான்மை ஏதும் ஏற்படுவதில்லை. அது தன் குடும்பத்துக்குச் சந்தோஷம் என்றே எடுத்துக் கொள்கிறாள். மனைவி முன்னேறும் போது கணவர் மட்டும் அப்படியே நின்று விடாமல், அவரும் தன் துறையில் வெற்றியாளராக முன்னேறினால் கணவர் – மனைவிக்கு இடையே தாழ்வு மனப்பான்மைக்கு இடமில்லை. இதனால் எந்தவித பிரச்சினையும் ஏற்படாமல் தவிர்க்கப்படும்.

இந்த வாழ்க்கையில் நாங்கள் எதைத் தேர்தெடுத்தோம், அது எமது வாழ்வில் ஒத்துப்போகக் கூடியதாக இருக்கிறதா என்று பார்த்து, அதைத் தெரிவுசெய்து பாதகமில்லாத சந்தர்ப்பத்தை உள்வாங்கி விடவும் பழகிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் பற்பல மாற்றங்கள் நடைபெறும். அந்த மாற்றங்களுக்குள் கண்டிப்பாக எங்களையும் ஈடுபடுத்தவேண்டும். அப்பொழுதுதான் சமூகம் எங்களைப் பார்க்கத்தூண்டும். அந்த மாற்றங்கள் நல்லதாக இருக்க வேண்டும்.

(தொடரும்...)

# பிஞ்சு முகத்தின் தேடல்

இன்றைக்கு எங்கள் வீட்டில் ஒரே ஆரவாரம். காலையிலிருந்து வீட்டில் சோடினை நடக்கிறது. அப்பாவும் அவருடைய நண்பர்களும் வீட்டை அலங்கரிப்பதில் மும்முரமாக இருக்கிறார்கள். அம்மா யன்னல்களுக்குப் புதிய திரைச் சீலைகள் மாட்டிக் கொண்டிருக்கிறாள். அண்ணாவும், அக்காவும் கேக் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய சிநேகிதர்களும் உதவியாக நின்று அரட்டையடித்துக் கொண்டு நிற்கிறார்கள். என்னுடைய சின்னத்தம்பி கூட எதையோ இழுத்துக் கொண்டு ஓடுகிறான். நான் மட்டும் கால்களை முடக்கிக் கொண்டு குந்தி இருக்கிறேன். என் மனமோ... நேற்றுப் பார்த்த காட்சியையே நினைத்து ... என்ன செய்யலாம் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்க ... நான் இனிமேல் பொறுக்க முடியாது என எண்ணியபடி இருக்க... படார் ! என்று ஒரு சத்தம். அப்பா ஊதிய பலூன் வெடிக்க.. அம்மா துள்ளிக் குதிக்க, எல்லோரும் சிரித்தார்கள்! சே! என்ன மனுசர்கள்.. எதற்குச் சிரிக்கிறது? எதற்கு அழுகிறது? என்று தெரியாத மூடர்கள். நான் மனதுக்குள் திட்டியபடி மெல்ல எழுந்து நழுவினேன்.

என் கால்கள் என்னை இழுத்துச் சென்றன. நான் நடந்து போய் கால்கள் நிற்கவே நின்றேன். ஓ! ... நேற்றைய இடம் தான். என் கண்கள் ஆவலாகத் தேடின. அப்பாடா... அதோ அந்த மேட்டில் அது படுத்திருந்தது. நான் ஆவலோடு அருகில் ஓடிப் போனேன். என்னைக் கண்டதும் அந்த உருவம் எழும்பிக் குந்தியது. வா மோனை! என அன்போடு என்னை நோக்கிக் கைகளை நீட்டியது. நான் அந்தக் கைகளைப் பற்றிக் கொண்டு சிரித்தேன். அந்த உருவத்தின் ஒட்டிய முகத்திலும் சிரிப்புத் தோன்றியது. நான் பக்கத்தில் உட்கார்ந்தேன். உருவம் என்னிடம் கேட்டது. மோனை நீ வந்தது அம்மாவுக்குத் தெரியுமா? நான் இல்லை என்று தலையசைத்தேன். உருவம் என் தலையைத் தடவியது. நீ சொல்லாமல் வரக் கூடாது... வீட்டில் தேடுவார்கள் அந்த உருவம் சொல்ல, நான் அவசமாக இடை மறித்தேன். எனக்கு அங்கை ஒண்டும் பிடிக்கவில்லை. எல்லாரும் என்னைப் பற்றி யோசியாமல் தங்கடை அலுவலைப் பாக்கினம்! நான் படபடவென்று பொரிந்து தள்ளினேன். சரி... சரி... இப்ப கோவம் வேண்டாம் குஞ்சு. அது சொன்னபோது என் மனமும் சம நிலைப்பட நான் அமைதியானேன்.

நேற்றுப் பாடசாலை விட்டு வந்த போது, இந்த உருவம் தெருக்கரையில் விழுந்து கிடந்தது. என் சக பாடிகள் எல்லோரும் பைத்தியம்... என்று பகிடி பண்ணினார்கள். சிறு குச்சி எடுத்து எறிந்தார்கள். கல்லையும் எடுத்து அதன் மேல் வீசினார்கள். உருவம் எழும்பவில்லை . சற்றே அசைந்தது. நான் மெல்ல கிட்டப் போனேன். என் சிநேகிதர் கள் தூரப் போய் நின்று கத்தினார்கள். ஐயோ! ... பைத்தியம் பிடிச்சுக்கொண்டு போய் விடும். இஞ்சாலை ஓடி வா அவர்கள் குரலில் பயம் தொனித்தது. நான் அசையவில்லை. உருவம்



மெல்லக் கஷ்டப்பட்டு எழும்பியது. நான் உருவத்தை உற்றுப் பார்த்தேன். என் சிநேகிதர்கள் ஓடிப்போய் விட்டார்கள்.

திடீரென அந்த உருவம் என் தோளில் தொங்கிய பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தலைப் பற்றி இழுக்கவே நான் நிலை குலைந்து கீழே அதனருகில் விழுந்தேன். தண்ணீர் போத்தலை என் கழுத்திலிருந்து எடுத்து, உருவம் திறந்து மடமடவென்று குடிக்க, நான் அதிர்ச்சியால் உறைந்து போயிருந்தேன். அப்போது தான் அம்மா கரைச் சுத்தந்த தோடம்புழச் சாற்றைப் பாடசாலையில் விளையாட்டு மும்முரத்தில் குடிக்க மறந்து போனது நினைவுக்கு வந்தது. உருவம் குடித்து முடியப் போத்தலை என்னிடம் நீட்டியது. எனக்கு அப்போது தான் அதற்கு சரியான பசியென்பது விளங்கியது. மளமளவென்று புத்தகப் பையைத் திறந்தேன். என்னுடைய சாப்பாட்டுப் பெட்டியை எடுத்து நீட்ட, உருவம் அதை ஆவலோடு பறிக்க, அது என் கையிலிருந்து கீழே விழ, உள்ளே இருந்த புட்டுப் பிரட்டல் நிலமெங்கும் சிதறியது. ஐயோ எல்லாம் மண்ணுக்கை.,. என் மனம் அலறியது.

உருவமோ அதை வாரிக் கூட்டியெடுத்து வாயில் போட்டது. நான் என்னை மறந்தேன். நானும் குந்தியிருந்து உருளைக் கிழங்குப் பொரியலைப் பொறுக்கி அதன் வாயில் போட்டேன். அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது. என் கடைக்கண்ணிலும் கண்ணீர் திரண்டது. வகுப்பிலே ரீச்சர் சொன்ன குறள் ! நாங்கள் கரும்பல கையைப் பார்த்துக் கொப்பியில் எழுத வைத்த குறள், ரீச்சர் பொருள் சொன்னபோதும், விளங்காத குறள் இப்போது தெளிவாக விளங்க, நான் உருவத்திடம் மீதியாருந்த சொக்ளேற்றையும் எடுத்து நீட்டினேன். அது அதையும் வாங்கி அவசரமாக உரித்துச் சாப்பிட்டது. இப்போது என் வயிறு நிறைந்தது போல உணர்ந்தேன். உருவம் எழும்பி என் கையைப் பற்றி முத்தமிட்டது. கண்ணில் ஒற்றிக் கொண்டது. என் கையில் அதன் கண்ணீரின் ஈரம் பட்டது. நான் சாப்பாட்டுப் பெட்டியை புத்தகப் பையில் வைத்துக் கொண்டு நகர்ந்தேன். அந்த உருவம் என்னைப் பார்த்துச் சிரித்த சிரிப்பு என்னை அதன் வசப்படுத்திவிட்டது. நான் மீண்டும் அந்த உருவத்தைக் காணவிரும்பினேன்.

என்னை மோனை! கனக்க யோசிக்கிறாய்...! உருவம் கேட்டபோது நான் ஒன்றும் பேசவில்லை. நேற்று என்னைப் பற்றி நீ யோசிச்சிருப்பாய்! அவ்வளவு பிள்ளையளும் பைத்தியம் என்று என்னைப் பார்க்க, நீ மட்டும் மனுசியாகப் பாத்தாய்! உருவம் சொன்னது உண்மைதான். எனக்கு அந்த உருவத்தைப் பார்க்க எனக்குப் பைத்தியமாகத் தெரியவில்லை. பல நாள் பழகிய உறவாகத்தான் தெரிந்தது. இனிமேல் பெயரைக் கேப்பம் எண்டு முடிவு செய்து, வாயைத் திறந்த போது, அந்த உருவம் என்னை முந்திக் கொண்டது என்ரை பேர் செல்வமலர். ஒரு காலத்தில் செல்வத்தோடை சீராக இருந்தேன். என்ரை பிள்ளையெல்லாம் என்னைப் பிரிஞ்சு போயிட்டினம். என்ரை அவர் 10 வருசத்திற்கு முந்தி மாரடைப்பிலே செத்துப் போனார். நான் தனிச்சுப் போனேன். இடம் பெயர்வாலை எங்கையோ எல்லாம் அலைஞ்சன். எங்கடை வீட்டுப் பக்கம் போக ஏலாது. இப்ப எனக்கு 75 வயதாப் போச்சு. இன்னும் கொஞ்சக் காலம் தானே! ... உருவம் சொல்லி நிறுத்த, நான் மௌனமாக இருந்தேன். என்னை நீயெண்டாலும், பாட்டி எண்டு கூப்பிடு மோனை ! என்ரை பேரப் பிள்ளையளை நான் சந்திக்க மாட்டேன். நான் என் மனதில் தோன்றியதை பாட்டியிடம் சொல்ல முடியாமல் தவித்தேன். ஆனால், பாட்டி அதை உடனே அறிந்து கொண்டாள். மோனை ! நான் உங்கடை வீட்டை வர முடியாது. எட! இப்படி என் மனத்தை விளங்கிக் கொள்ள எங்கள் வீட்டில் ஒருவரும் இல்லையே!

நான் பாட்டி என்று மெல்லக் கூப்பிட்டேன். எனக்கே அது இனிப்பாக இருந்தது. பாட்டி திரும்பினாள். அவள் முகத்தில் ஒரு வெளிச்சம் . அவள் கண்கள் மின்னின. என்னை அன்புடன் அணைத்துக் கொண்டாள். அவள் தன் இடுப்பிலிருந்த ஒரு காட்டை எடுத்து நீட்டினாள். நேற்று என் வகுப்புத் தோழி எனது பத்தாவது பிறந்த நாளை வாழ்த்தி எழுதித்தந்த பிறந்தநாள் வாழ்த்து. மோனை! இண்டைக்கு உன்ரை பிறந்தநாள். நான் ஏதும் பரிசு தரவேணும் . என்னட்டைப் பெரிசா ஒண்டும் இல்லை. இது தான் கிடக்கு. இது என்ரை அவர் நான் கலியாணம் கட்டினபோது போட்டுவிட்டது. இவ்வளவு நாளும் கவனமாக வைச்சிருந்தன். இப்ப உனக்குப் போட்டுவிடுறன். அவள் ஒரு சிறிய வெள்ளி மோதிரத்தை என் பெருவிரலில் போட்டு விட்டாள். அது என்ரை மோதிர விரலுக்குப் பெருந்துப் போச்சு. பாட்டி சொன்னாள் நான் நாளைக்கு வேறை இடத்துக்குப் போறன். விதி இருந்தால் நாங்கள் சந்திப்பம். எனக்கு கண்ணில் நீர் முட்டியது. நான் ஒன்றும் சொல்ல முடியாமல் தலைமை மட்டும் அசைத்தேன். பாட்டியும் கண்ணைத் துடைத்துக் கொண்டு நீ பல்லாண்டு வாழ வேண்டும். என்று வாழ்த்த, நான் மெல்ல வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன். என் பெரு விரல் மோதிரம் என்னைப் பார்த்துச் சிரித்தது. அதைத் தடவிக் கொடுத்தேன்.

**மனோன்மணி சண்முகதாஸ்**

# திருமணத்தின் போது பெற்றோரின் சம்மதம் தேவைதானா?





திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பதால் தான் அதில் பெற்றோர்கள் தலையிடுகிறார்கள். சாப்பாடு மோசமானால் சில வேளை நட்டம். அறுவடை மோசமானால் சில காலம் நட்டம். ஆனால், திருமணம் மோசமானால் உயிருள்ளவரை நட்டம். காலம் முழுவதும் கண்ணீர் வடிக்க நேரிடும். இதைக் கருத்திற்கொண்டுதான், ஒவ்வொரு பெற்றோரும் தன்பிள்ளையின் திருமண விடயத்தில் மிகவும் அக்கறையுடன் வரன் பார்க் கிறார்கள்.

இதைப் புரியாத நம் இளம் தலை முறைகள் – ஏதோ மனப் பொருத்தத்தின் பேரில் துணை தேடிக்கொண்டு, திருமணப்பந்தத்தில் புகுவதால்தான், ஏனைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மிகவும் கடுமையாக முகம் கொடுக்க நேரிடுகிறது.

ஒவ்வொரு பிள்ளைக்கும் சிறுவயது முதல் வாலிப வயது வரை பெற்றோரின் துணையும், பங்களிப்பும் தேவைப்பட்டது. திருமண விடயத்தில் மட்டும் பெற்றோரின் இஷ்டத்தை நஷ்டமெனக் கருதும் பல பிள்ளைகள் – நம் மத்தியில் இருப்பது வேதனைக்குரிய விடயமே. பாதை தவறிய கால்கள் விரும்பிய ஊர் சென்று சேர்வதில்லை. நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவர்கள் பெயர் சொல்லி வாழ்வதில்லை.

திருமண விடயத்தில் பெற்றோரின் விருப்பத்தை புறக்கணித்த எந்தவொரு பிள்ளைக்கும் நல்ல வாழ்வு கிடைத்ததாகச் சரித்திரங்கள் இங்கே கூறவும் இல்லை.

பெற்றோரின் விருப்பத்தைப் புறக்கணித்து நடந்த திருமண வாழ்கையில் அந்த வாழ்வு அர்த்தமற்றுப் போனால், திரும்பவும் தேடி வருவது பெற்றோர்களிடமே. எமக்கு இன்பத்திலும் துன்பத்திலும் கை கொடுத்து உதவும் பெற்றோரின் சம்மதம் தான் திருமணத்தில் மிக மிக அவசியமாகிறது. அப்போது தான் எமக்கு வரும் எந்த துன்பத்துக்கும் ஆறுதலும் உண்டு. அடைக்கலமும் உண்டு. பெற்றோர்களுக்கே தெரியும், தன் பிள்ளையின் மனப் போக்குக்கும், தகுதிக்கும் ஏற்ற துணையைத் தேடிவருவதற்கு. தம்மை இருபது வருடத்துக்கும் மேலாக வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு பிள்ளையின் மனப்போக்கு மற்ற எல்லோரையும் விடப் புரிந்திருக்கும். இதையறியாது எமது இளம் தலைமுறையினர் ஏதோ இன்று, நேற்று புதிதான காதல் வலையில் சிக்கிக்கொண்டு ஏதோ மனப்பொருத்தத்தை மட்டும் தான் பெரிதுபடுத்துகிறார்கள் தவிர, வாழ்க்கையின் பாரதூரங்கள் புரியாது அவர்களுக்கு.

திருமணத்துக்குப் பின் எத்தனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அத்தனைக்கும் அன்பு மட்டும் இருந்தால்போதாது. திருமணப் பந்தத்தில் பெற்றோர்கள் தலையிடுவது சிறியவர்களின் சிறப்பான வாழ்வுக்கேயன்றி, வேறில்லையென்பதை இன்றைய இளம் வயதினர் உணரவேண்டும். வாழ்க்கை உங்களுடையதாக இருக்கலாம். ஆனால், அதற்கு வழி காட்டும் பொறுப்பு பெற்றோரின் கையில்தான் தங்கியுள்ளது. எனவே, பெற்றோரின் விருப்பத்துக்கு மதிப்பளிக்கும் எந்தவொரு பிள்ளையின் வாழ்வும் சிதறாது என்பது திண்ணம். ✳

## ஜீவனோபாயத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியை சுழற்சி முறையில் வழங்கமுடியாத நிலையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜீவனோபாய கடனுதவித் திட்டததின்கீழ், வழங்கப்பட்ட நிதி - உரியமுறையில் திருப்பிப்பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஆனைவிழுந்தான் கிராமத்தில் ஜீவனோபாய கடனுதவித் திட்டத்தின்கீழ், 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

இந்தியாவில் இதுவரையில் 90 ஆயிரம் ரூபா மட்டுமே பெறப்பட்டுள்ளது.

இதனால் ஏனைய பயனாளிகளுக்கான கடன் திட்டத்தைச் சுழற்சி முறையில் செய்ய முடியாதிருப்பதாக, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் தெரிவித்திருக்கிறது.




## புலிகளின்குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய காற்றின்துளிகள் தொகுப்பின் நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

புலிகளின்குரல் வானொலியில் ஒலிபரப்பாகிய வெள்ளிப் பொழுது - படைப்புகளின் தொகுப்பாகிய பொன்.காந்தனின் "காற்றின் துளிகள்" நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் புலிகளின்குரல் நிறுவன துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரைத் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் ஈகைச் சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கா்ண்டீபன், மூத்த பத்திரிகையாளர் கோபு ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வின் வரவேற்புரையை புலிகளின்குரல் நிறுவன நிர்வாக இணைப்பாளர் இராஜேஸ்வரன் நிகழ்த்தினார்.

நூலின் வெளியீட்டுரையை புலிகளின்குரல் பிரதம செய்தியாசிரியர் சி.தவபாலன் நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை தமிழீழ காவல்துறைத் துணைப் பொறுப்பாளர் மாதவன் வெளியிட்டுவைக்க, தமிழீழ வைப்பகத்தின் பணிப்பாளர் வீரத்தேவன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.





வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆங்கிலதின விழாவில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோரும், அவரது பாரியாரும் அழைத்து வரப்படுவதையும், மாணவிகளின் கலைநிகழ்வையும் படத்தில் காணலாம். படம்: கனகரவி

### தேசிய எழுச்சிப்பேரவையின் கலந்துரையாடல்

கிளிநொச்சி உதயநகர் மேற்கு, ஆனந்தபுரம் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் தேசிய எழுச்சி பேரவைகளை ஒருங்கிணைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி அரசியற்துறைச் செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச ரீதியாக மாவீரர் நாளை முன்னெடுப்பது தொடர்பாகவும், மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிப்பதும், பொது இடங்கள், மாவீரர் துயிலும் இல்லங்களைத் தூய்மையாக்குதல், அலங்கரித்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## மன்னார் பேசாலை சென்யூட் வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

மன்னார் - பேசாலை சென்யூட் வீதியில் அமைந்துள்ள மதுபானச் சாலை முன்பாக குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

பேசாலை எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த மெல்கி தலாமா எமல்கி (வயது 37) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வீட்டிலிருந்து வெளியேறிய இவர் - அன்றைய தினம் இரவு வீடு வந்து சேராததை அடுத்து, அவரைத் தேடியவேளை சென்யூட் வீதியில் அமைந்துள்ள மதுபானச் சாலையின் முன்பாக சடலமாக இருப்பதைக் கண்டு மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற தலைமன்னார் பொலிஸார் சடலத்தை பேசாலை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இறந்தவரின் உடல் - அளவுக்கு அதிகமான மதுபானம் அருந்தியதால், உடலினுள்ள அற்ககோலின் செறிவு அதிகரித்ததால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து, சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் எம்.என் அப்துல்லா உத்தரவிட்டார்.

## உமையாள்புரத்தில் முன்பள்ளி இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் முன்பள்ளி வசதியின்மையால், இந்தப் பகுதிச் சிறார்களின் கல்விநிலை பாதிப்படையும் நிலையில் காணப்படுகிறது.

இந்தப் பகுதி இராணுவ நடவடிக்கையிலிருந்து மீட்கப்பட்ட பின்னர் - மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், இங்குள்ள சிறார்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான முன்பள்ளி இல்லாதுள்ளதாக இந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீரை வழங்குவதற்கான ஆய்வை மேற்கொள்ள முயற்சி

யாழ்ப்பாணத்துக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஆய்வை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து வரும் நிலநீர் நிபுணர்கள் யாழ்பாணத்துக்கு குடிநீர் வழங்குவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு அதற்குரிய திட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்கவுள்ளார்கள்.

இந்த திட்டத்துக்கு அமைவாக கிளிநொச்சி பிரதேசத்தில் இரணைமடு தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

இது தவிர அக்கராயன் குளத்தில் நிரப்பி யாழ். கடலேரியில் கலக்கும் குடமுருட்டி ஆற்றின் மூலம் நீர் தேக்கத்தை அமைத்து, அதிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீரை வழங்குவது தொடர்பாகவும், பூநகரி மண்டக்கல்லாறை மறித்து, நீரை தேக்கி, அதிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீரை வழங்குவது தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் வடமராட்சி கிழக்கு கடற்கரையோரத்தில் காணப்படும் நன்னீர் ஊற்றுக்களை ஆராய்ந்து, போதியளவு நீர் உள்ளதா என்பதை ஆராய்ந்து, யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் வழங்குவது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதமளவில் ஆய்வு முடிவடையும். இந்த ஆய்வில் ஜேர்மனியைச் சேர்ந்த நிபுணர்கள் ஈடுபடவுள்ளதாக கிளிநொச்சிப் பிரதேச நீர்ப்பாசன இயக்குநர் தெரிவித்தார்.

## கிளிநொச்சி - விசுவமடுப் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவை கலந்துரையாடல்

கிளிநொச்சி விசுவமடுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை விசுவமடு பிரதேச அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் விசுவமடுத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துரைகளை விசுவமடுப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திவாகர், விசுவமடு மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் சீதாராம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் மாவீரர்நாள் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், பொது இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வது, மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு போன்ற முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

## மருதங்கேணி பிரதேசத்தில் மருந்தகம், மகப்பேற்று விடுதி எதிர்வரும் 10 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி மத்திய மருந்தகமும், மகப்பேற்று விடுதியும் திறந்து வைக்கப்படவுள்ளன.

நிகொட் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 1 கோடியே 80 லட்சம் ரூபா செலவில புனரமைக்கப்பட்ட மருதங்கேணி மத்திய மருந்தகம், மகப்பேற்று விடுதி என்பன எதிர்வரும் 10 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் இந்த மருததுவமனைக்கு அம்புலன்ஸ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. மற்றும் ரூபா 20 லட்சம் பெறுமதியான மின்பிறப்பாக்கி ஒன்றும் வழங்கப்படவுள்ளது.

கடந்த காலத்தில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட போர் நடவடிக்கையால் இந்த மருத்துவமனை முற்றாக சேதமடைந்தது. இதனால் இந்தப் பகுதி மக்கள் தமது மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதநிலை காணப்பட்டது.

தற்போது இந்த மருத்துவமனை புனரமைப்பு செய்து, திறந்து வைக்கப்படுவதையிட்டு இந்தப் பகுதி மககள் தமது பாராட்டைத் தெரிவித்தனர்.



கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் சுலோசனி கதிரவேற்பிள்ளையினால் வட்டக்கச்சி மாயவனூர் பயனாளி ஒருவருக்கு ஜீவனோபாயக் கடன் வழங்கப்படுகிறது.

### 'நிழல்' இதழ் வெளிவந்துள்ளது

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளியீடான 'நிழல்' இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் புலம் பெயர்ந்து வாழும் உறவுகளின் பேராதரவுடன், வறிய மக்களின் உயிர்க்காப்பு சிகிச்சை உதவித்திட்டம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் - ஆங்கில மொழிக்கல்லூரி, கணினிக்கல்லூரி, முகாமைத்துவ கல்லூரி ஆகியவற்றின் திறப்பு விழா உருப்பெற்று வரும் தட்டுவன் கொட்டி கிராமம், கிராம தரிசனம் போன்ற முக்கிய செய்திகளுடன் வெளியாகியுள்ளது.

## பாண்டியன்குள பிரதேச விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன

முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பிரதேச விவசாயிகளுக்கு உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவி என்பன வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு - பாண்டியன்குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பால சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் வேங்கை மாறன் ஏற்றிவைத்தார்.

இந்தப் பிரதேச 10 விவசாயிகளுக்கு உழவு இயந்திரமும், 15 விவசாயிகளுக்கு தெளிகருவிகளும், 5 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி*
*உற்றது உணர்வார்ப் பெறின்*

திருக்குறள்

# நமது நோக்கு

## நெருக்கடிகளுக்குள் அரசு... அழுத்தங்களுக்குள் ஜனாதிபதி!

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு எடுத்துள்ளதாக ஊடகத்தகவல்கள் கூறுகின்றன.

அது மட்டுமல்லாது- சமாதானப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் புலிகளுடன் ஆரம்பிக்கும் வரை இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பான கூட்டத்தை ஒத்திவைப்பதற்கும் தீர்மானம் எடுப்பது குறித்து இதே ஐரோப்பிய சமூகம் ஆராய்ந்து வருவதாகவும் அறியவந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தீர்மானங்கள் குறித்த செய்திகள் உண்மைகளாக இருப்பின் - இது இலங்கை அரசின் சமாதானமுயற்சிகள் தொடர்பான பொறுப்பற்றதும், அக்கறையற்றதுமான நகர்வுகளால் ஐரோப்பிய சமூகம் அதிருப்தி அல்லது ஏமாற்றம் அடைந்துள்ளதாகவே கருதமுடியும்.

இலங்கையில் தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி அரசும், நிறைவேற்று அதிகாரவலுக் கொண்ட ஜனாதிபதியும் இலங்கையின் இனவிவகாரம் அமைதியான முறையில் சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் ரீதியில் தீர்க்கப்படவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் விருப்பார்வத்தையும் அதற்காக அவர்கள் எடுக்கும் பிரயத்தனங்களையும் சரியான முறையில் கௌரவிப்பதாக இல்லை என்ற முடிவுக்கு உலகம் வந்துவிட்டது என்பதையே ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிவு உணர்த்துவதாகவும் உள்ளது.

இதேவேளை இந்த வாரம் இங்கு வந்து சென்ற ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி அவர்கள் அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பினரையும் சந்தித்துப் பேசியபின்னர் சமாதான முயற்சிகளின் தற்போதைய யதார்த்த நிலைகுறித்து தெளிவாகவோ, தீர்க்கமாகவோ எதனையும் நம்பிக்கையுடன் தெரிவிக்காத போதும் - ரோக்கியோ மாநாட்டின் மூலம் சர்வதேச சமூகம் வழங்கமுன்வந்த இலங்கைக்கான பெருந்தொகை நிதி இன்னமும் அப்படியே உள்ளது எனவும் - அதனை அரசுக்கு வழங்குவது என்பதும் அதன் சமாதான முன்னெடுப்பின் முன்னேற்ற நகர்வு மீதான பெருநம்பிக்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்றாக உள்ளதால் சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் வரை அதனை வழங்குவது தொடர்பாக எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியாத நிலையே இப்போது உள்ளது என்று கூறியுள்ளமையும், அரசை நோக்கிய ஒரு அழுத்தமேற் படுத்தும் நடவடிக்கையே ஆகும்.

ஐரோப்பிய சமூகம் எடுத்துள்ள முடிவும் ஜப்பானிய விசேட தூதர் அகாஷி வெளிப்படுத்திய கருத்தும் ஒரே தொனியைக் கொண்டனவாகவே உள்ளன.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை, நிதிப்பிரச்சினையை நிரந்தரமாகவே கொண்டுள்ள இலங்கை அரசின் திறைசேரி - வெளிநாட்டுக் கடனுதவிகளால் நிரப்பப்பட வேண்டிய அளவுக்கு வெற்றிடமாக உள்ளது என்பதை விளக்க வேண்டிய அவசியமே இல்லை.

இந்தநிலையில் கடன் நிதி கிடைத்தல் தாமதமாகுமெனில் அரசை, நிர்வாக இயந்திரத்தை தொடர்ந்து சிக்கலின்றி இயக்குவது என்பது சாத்தியமற்ற விடயமாகும். எனவே, விரும்பியோ, விரும்பாமலோ சமாதான முயற்சிகளில் விரைவாக ஈடுபட வேண்டிய அவசியம் அரசுக்கு உள்ளது என்றே கூறவேண்டும்.

ஆனால், அரசு பலவீனமான பெரும்பான்மையைக் கொண்டதாக இருப்பதும் அந்த அரசை பலமாக நிற்க ஓரளவுக்ேனும் உதவும் ஜனாதிபதியன் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு எதிராக இருப்பதும், ஜனாதிபதி பேச்சுவார்த்தை தொடர்பாக ஒரு தீர்க்கமான முடிவெடுப்பதற்குத் தடையாக உள்ளதெனலாம்.

இப்படி எழுதுவதால் ஜனாதிபதி சமாதான முயற்சிகளில் ஆர்வம்கொண்டவராக, உளப்பூர்வமாக பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதில் விருப்பார்வம் மிக்கவராக இருக்கிறார் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது.

சமாதானம் தொடர்பான சர்வதேச அழுத்தத்தின் நெருக் கடி காரணமாகவும், தேசிய நிதி நெருக்கடிக்காரணமாகவுமே அவர் சமாதானம் தொடர்பாக கொஞ்சமேனும் பேசிக்கொண்டிருக்கிறார்என்றால் அது பொய்யில்லை.

ஆனால், இன்றைய சூழல் அவர் எதிர்பார்த்ததுக்கு முற்றிலும் மாறான ஒன்றாக உருவாகத் தொடங்கியுள்ளது என்றே கூறவேண்டும்.

விடுதலைப் புலிகளின் சமாதனப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான நிலைப்பாடு தீர்க்கமானதும், தெளிவானதுமாக மட்டுமல்ல- ஒரே கருத்து நிலைப்பாட்டைக் கொண்டதாகவும், முன்னுக்குப்பின் முரணாக எதுமில்லாமல் இருப்பதும் சர்வ தேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துவரும் நிலையில், அரசாங் கம் மீதே சர்வதேச அழுத்தங்கள் குவிமையம் கொள்ளத் தொடங்கியுள்ளமையானது ஜனாதிபதிக்கு நெருக்கடியை உண்டுபண்ணும் விடயமாகியுள்ளது.

இந்த அழுத்தங்களில் இருந்து விடுபட அவர் மேற்கொள்ளும் அரசியல் தந்திரோபாயங்கள் அனுகூலமான பலனை அவருக்கு அளிக்காத நிலையே தொடர்வதால், அவர் ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டம் நெருங்குவதாகவே கூற வேண்டும்.

இலங்கை அரசியலில் எதிர்வரும் வாரங்கள் முக்கியமான சிக்கல்களைக் கொண்டதாகவே இருக்கப்போகிறது.

# நாடும் நடப்பும்




# கரையோர வளங்களைப் பாதுகாத்தல் செயலகத்தில் பயிற்சிப் பட்டறை!

(யாழ்ப்பாணம்)

சமூகப் பங்களிப்புடன் கரையோர வளங்களைப் பாதுகாத்தல், முகாமை செய்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். பத்மநாதன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட 50 பேர் இப்பயிற்சிப்பட்டறைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்றொழில் நீரியல் வளங்கள் நிறுவனத்தால ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் கருத்துரை வழங்குவதற்கு கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் உட்பட பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறைசார் வல்லுநர்கள் அடங்கிய 10 பேர் கொண்ட குழு கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளது.

- கரையோர, கடல்ஏரி மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளும், கொள்கைகளும்
- கடற்றொழில் நன்னீர் மீன்பிடி தொடர்பான தேசியக் கொள்கை
- கடல்வள முகாமைத்துவம்
- கரையோர வளமுகாமைத்துவமும் கரையோர சூழலும்
- கரையோர வளங்கள் பாதுகாப்பதில் சமூகப் பங்களிப்பு
- உவர்நீர் மீன்வளர்ச்சியிலே நின்று நிலைக்கத்தக்க உவர்நீர் மீன்வளர்ப்புக்கான சாத்தியக் கூறுகள்.
- சமூக மட்டத்திலான முகாமையும் கூட்டு முகாமைத்துவமும்
- கடல் உணவு தரம் பேணுதலும் கையாளுகையும்.

ஆகிய தலைப்புக்களில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறைசார் வல்லுனர்கள் பயிற்சிப்பட்டறையில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சிப் பட்டறையின் முடிவில் கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் க. தர்மலிங்கம் நன்றியுரை வழங்குவார். (21)

## சைக்கிளில் சமாந்தரமாக சென்றவர்களுக்கு அபராதம்

தற்போது நடைபெற்றுவரும் வீதி விபத்துக்களைக் குறைக்கும் வகையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் தலைமையில் பல நடவடிக்கைகள் முனனெக்கப்பட்டுள்ளது.

இதில் கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடியில் பொலிஸாரால் சமாந்தரமாகச் சென்றமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்திய பதினெட்டு இளைஞர்களையும் பருத்தித் துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் கடுமையாக எச்சரித்து அரச செலவாகவும் தண்டப்பணமாகவும் தலா ஆயிரம்ரூபா செலுத்தும்படியும் கட்டளை இட்டார்.

அத்துடன், நெல்லியடிப் பொலிஸாரால் மாத்திரம் 65 பேர்வரை கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களை இன்று நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரியவந்தது. (12)

## வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பது குறித்தும், இந்த வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன என்பது தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று - யாழ்.செயலக மண்டபத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர், பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மலையக மக்கள் பிரச்சினை இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மலையக மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக் கூறும் முகமாக இன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

பெருந்தோட்ட சமூக மாமன்றம், மனித உரிமைகள் இல்லம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தை அமுல்படுத்து வதற்கு எதிராகவும், பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படவேண்டும் என்பது உட்படப் பல்வேறு கோரிக்கைகள் இன்றைய ஆர்ப்பாட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டுவில் பகுதியில் பன்றிகள் அட்டகாசம்

(மட்டுவில்)

அண்மைக்காலமாக மட்டுவில் பகுதியில் குரங்குகள், காட்டுப் பன்றிகள், விஷப்பாம்புகள் என்பவற்றின் அட்டகாசமும், தொல்லையும் அதிகரித்து வருகின்றது.

மட்டுவில் மானாவளைப் பகுதியில் மாணவன் ஒருவனைத் துரத்திய குரங்கு ஒன்று அந்த மாணவன் சைக்கிளோடு புத்தகப் பையையும் விட்டுவிட்டுத் .தப்பியோடிய போது சைக்கிளில் அமர்ந்து அவனது புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்து வீசியுள்ளது. பையனின் கூக்குரலையடுத்து அயலவர்கள் விரைந்துவந்து குரங்கை விரட்டி புத்தகங்களை மீளப் பெற்றுக்கொடுத்தனர்.

இதேவேளை, மட்டுவில் வடக்குப் பகுதியிலுள்ள ஆட்களற்ற வீடுகள் மற்றும் வெற்று வளவுகளில் வானளாவ உயர்ந்து வளர்ந்துள்ள பற்றைகளின் மத்தியில் பன்றிகளும் பாம்புகளும் மறைந்திருந்து மக்களுக்குத் தொல்லை கொடுத்து வருகின்றன.

அண்மையில் முத்துமாரியம்மன் கோயில் வீதியிலுள்ள ஒரு வீட்டில் சுமார் 6 அடி நீளமுள்ள பாரிய நாகபாம்பு ஒன்று அடித்துக் கொல்லப்பட்டது. இதனால் இரவு நேரத்தில் வீட்டுக்கு வெளியேவர மக்கள் அஞ்சுகின்றனர். காலை வேளையில் எழுந்து பார்த்தால் வீட்டு வளவுக்குள் பன்றியினதோ, பாம்பினதோ தடயங்களைக் காணக்கூடியதாக இருப்பதாக மக்கள் அச்சத்துடன் தெரிவித்தனர். (24)

## சமூகசேவை அலுவலர்களுக்கு திருமலையில் பயிற்சிநெறி

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சமூகசேவை அலுவலர்களுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதியும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் திருகோணமலையில் பயிற்சிநெறி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

திருகோணமலை துளசிபுரத்திலுள்ள கல்வி அமைச்சின் கீழுள்ள மனிதவள நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் வெளிமாவட்ட அலுவலர்களுக்கு உணவும், தங்குமிடவசதியும் வழங்கப்படுமென, சமூகநலத்துறைத் திணைக்களப் பணிப்பாளர், சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த சமூகசேவை அலுவலர்களுக்கு கடிதம் மூலம் அறியத் தந்துள்ளார். (24)

# இவ்வார கிரகபலன்
## 05-11-2004 11-11-2004

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| யுரே | 06 ப. 9.09 சிங் - சந்<br>08 மா 6.15 கன் - சந்<br>10 இ 11.41 துலா - சந் | | சந்<br>சனி |
| நெப் | 06 ப. 9.09 சிங் - சந்<br>08 மா 6.15 கன் - சந்<br>10 இ 11.41 துலா - சந் | | |
| | புத | சூ,செவ்<br>கேது | குரு<br>சுக் |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லெண்ணம், ஒற்றுமை வளரும். பிதா வழியில் உதவிகள் உண்டு. தொடங்கும் கருமங்கள் இலகுவாக நிறைவேறும். எதிர்பார்த்திருந்த பொருள் வரவுகள் வந்து சேரும். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் கிட்டும். பதவி உயர்வுகள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் லாபம் தரும். வங்கி உதவிகளும் உண்டு. மாணவர் கல்வியில் ஆர்வமும், சுயமுயற்சியும் உடையவராய் இருப்பர்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப உதவிகள் சிறப்பாக அமையும். இனபந்துக்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். எடுத்த கருமங்கள் தங்குதடையின்றி வெற்றிதரும். தொழில்துறையும் வருவாயும் திருப்தியாக இருக்கும். திடீர் பிரயாணங்கள், பொருள் வரவு ஏற்படலாம். மங்கல வாழ்க்கையை எதிர்பார்த்திருப்போருக்கு கருமம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் மதிப்பும், மரியாதையும் ஏற்படும். பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்பாக நடக்கும். புடவை வியாபாரிகள் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். பரீட்சையில் சித்தி உண்டு.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனி நடந்து கொண்டிருப்பதால், குடும்பத்தில் பல பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கும். பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். பண நெருக்கடிகள் திடீரொன்று தலைதூக்கும். தேகசுகம் குறைவடையும். உறவினர்களின் உதவி கிடையாமற்போகும். நண்பர்கள் திரும்பியும் பார்க்கமாட்டார்கள். திருமணப் பேச்சுக்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சகதொழிலாளர்களின் உதவி கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலையே தொடரும். வங்கி உதவிகளும் உரிய நேரத்தில் கிடையாது. மாணவர்கள் கல்வியில் அக்கறை குறைந்து காணப்படுவர். பரீட்சை ஏமாற்றமளிக்கும்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியினருக்கு குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றும். சகோதரர்கள், புத்திரர்கள் வழியால் துன்பங்கள் அதிகரிக்கும். அன்றாடச் செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். வருமானம் குறைவாகவே இருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிக்கும். வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேதனம் பற்றாக்குறையாக இருக்கும். வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் தத்தளிப்பர். வியாபாரம் நட்டத்திலேயே செல்லும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் உடல் நலக்குறைவால் முன்னேற்றம் தடைப்படும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இல்வாழ்க்கை சிறப்பாக அமையும். கணவன் மனைவியிடையே அந்நியோன்னியம் தென்படும். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். இனசனக் கொண்டாட்டங்களால் குதூகலம் காணும். பணவரவு திருப்தியாக அமையும். மண வாழ்க்கையை விரும்புபவர்களுக்கு தாமதத்தின் மேல் கருமம் கைகூடும். எண்ணம் போல் கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். வதியான இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சீராக நடக்கும். நல்ல லாபம் கிட்டும். வங்கி உதவிகளும் உண்டு. மாணவர்கள் புத்தி சாதுரியத்தால் நல்ல முன்னேற்றம் காண்பர். சிலருக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கலாம்.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசிக்காரருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் சிறப்புக்களும், வருவாயும் அதிகரிக்கும். புத்திரர்களால் நன்மை கிட்டும். உறவினர்களுடன் கூடுதலான ஒட்டுதல் இருக்கும். நண்பர்களும் உதவுவார்கள். பெண்கள் ஆடம்பரப் பொருட்களில் கூடுதல் நாட்டம் கொள்வர். தொடங்கும் கருமங்கள் வெற்றியாக முடியும். வெளிநாட்டிலிருந்து பணவரவு ஏற்படலாம். திருமணப் பேச்சுக்கள் நல்ல பலனைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்குச் செல்வாக்கு அதிகரிக்கும். ஊதிய உயர்வும் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் தரும். பணம் சேரும். நகை வியாபாரம் கூடுதல் பலன் தரும். மாணவர்கள் சுய முயற்சியால் முன்னேறுவார்கள்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியினருக்கு 12 இல் வியாழன் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் இருக்கும். தேகசுகம் சற்றுப் பாதிப்பாகவே இருக்கும். புத்திரர் வழியால் செலவு அதிகமாகும். குடும்பச் செலவுகளும் சற்று அதிகமாகவே இருக்கும். தொடங்கும் கருமங்கள் தடைதாமதம் காட்டும். விவாகப் பேச்சுக்கள் நிறைவு பெறுவதில் தாமதம் காணும், உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகளின் கெடுபிடிகளும் கூடுதலாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். வாடிக்கையாளருக்கு ஏற்ற வகையில் வியாபாரம் செய்தால் லாபமுண்டு. மாணவர்களுக்கு ஊக்கம் குறையும். பரீட்சை முடிவுகள் திருப்தி தராது.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லிணக்கம் காணப்படும். உறவினர்களிடையே நெருக்கம் அதிகரிக்கும். பொருளாதாரம் திருப்தியாக இருக்கும். சுயவிருப்பங்கள் பொதுவாக நிறைவு பெறும். மணவாழ்க்கையை எதிர் நோக்குவோர் மகிழ்ச்சி காண்பர். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். செல்வாக்கு வளரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். விற்பனவு இலாபம் தரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமும், முயற்சியும் உடையவராக இருப்பர். சித்தி உண்டு.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசுராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்பத்தில் அடிக்கடி சிறு சச்சரவுகள் ஏற்படும். புத்திரர்களால் உதவி இருந்தாலும் செலவுகள் கூடும். தொடங்கும் காரியங்களில் தடை தாமதம், அலைச்சல் ஏற்படலாம். தேகசுகத்தைப் பொறுத்தமட்டில் அதிக அக்கறை தேவை. பிரயாணங்கள் முதலியவற்றில் அலைச்சல் கூடுதலாக இருக்கும். விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் பின் தள்ளிப் போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். வசதி குறைந்த இடமாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையைக் காட்டும். முதலீடுகள் தேங்கப் பார்க்கும். அவதானம் தேவை. மாணவர்கள் சோம்பலும், அமைதியின்மையும் உடையவராகக் காணப்படுவர்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மக்களால் நன்மைகள், உதவிகள் கிடைக்கும். வீட்டில் மங்கள நிகழ்வு ஏற்படலாம். பணவருவாய் சீராக இருக்கும். எடுத்த கருமங்கள் வெற்றியளிக்கும். தேகசுகம் பாதிப்படையாது. திருமணப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு மரியாதை அதிகரிக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஆடை, ஆபரணம் விற்பனை செய்வோர் கூடிய லாபம் காண்பர். வங்கி உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இடையிடையே வாக்கு வாதங்கள் தோன்றும். கருமங்கள் எளிதில் கைகூடாது. அலைச்சல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். குடும்ப வருமானம் அதிகரித்தாலும், செலவு மேலோங்கி நிற்கும். மனைவி மக்களாலும் செலவு அதிகமாகும். குடும்பப் பெண்கள் ஆடம்பர விருப்பால் அதிக செலவை ஏற்படுத்துவர். வர்த்தகர்களுக்கு இலாபம் குறையும். முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. ஊழியர்களிடையே ஒத்துழைப்புக் குறைவு. உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் எதிர்ப்புகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். அதிகாரிகள் கடும் போக்கைக் கடைப்பிடிப்பர்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரருக்கு வாழ்க்கையில் சில கசப்புகள் ஏற்பட்டாலும், அவை நீடிக்காது. மனநிம்மதி உண்டு. தொடங்கும் கருமங்கள் விரைவில் நிறைவு பெறும். பணவருவாய் இருந்தாலும், செலவுகளுக்கும் குறைவில்லை. ஆடம்பர ஆசையைக் குறைத்துக் கொண்டால் நல்லது. தேகாரோக்கியம் பொதுவாக நன்று. திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவைத்தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வேலை மாற்றங்கள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக நடக்கும். வங்கி உதவிகள் பின்னடிக்கக் கூடும். மாணவர்களுக்கு ஊக்கமும், முன்னேற்றமும் கிட்டும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும்.

---

அரசியல்...

# அரசின் போர்த்திட்டமிடல் குழு அமைப்பும்; சமாதானத்தை பின்நகர்த்தும் முனைப்பும்!

இலங்கை பாதுகாப்பு அமைச்சிலிருந்தும் முப்படைகளின் உயர் மட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட ஒரு குழுவினர் அடங்கிய சிறப்புக் குழுவொன்றை போர் ஆயத்தங்களை முன்னெடுக்கவும். ஆராயவுமென இலங்கை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார். இலங்கை பாதுகாப்புச் செயலகத்தின் பொறுப்பதிகாரி தயா சந்தகிரியினூடாக சந்திரிகா உருவாக்கியுள்ள போர் திட்டமிடல் குழு எனப் பெயரிடப்பட்டுள்ள இக்குழுவுக்கு கடற்படைப் பிரதித்தளபதி சரத் வீரசேகர தலைமை தாங்கவுள்ளார்.

பாதுகாப்புக் கட்டளைத் தலைமையத்தைச் சேர்ந்த பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய, இராணுவக் கட்டளைப் பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் கிரிசாந்த சில்வா, விமானப் படையைச் சேர்ந்த கொமடோர் றோசான் குணதிலக, பிரிகேடியர் ஏ.சந்திரசிறீ, கொமடோர் திசரா சமரசிங்க ஆகியோர் இக்குழுவின் முக்கிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் அங்கம் வகிக்கும் சிலர் ஏற்கனவே வடக்கு - கிழக்கின் இராணுவ மற்றும் முப்படைகளின் முன்னரண்களுக்கு பயணம் மேற்கொண்டு கள நிலைமைகளை ஆராய்ந்துள்ளதாகவும், தொடர்ந்தும் சில முக்கிய ஆய்வுகளை மேற்கொண்டு ஒரு கூட்டறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. போர் ஆரம்பிக்கும் பட்சத்தில் முப்படைகளினதும் போர் யுக்தி, சக்தி தொடர்ந்து தாக்குப்பிடித்துப் போராடத்தக்க களநிலை போன்றவற்றையே இக்குழு குறிப்பாக ஆராயவுள்ளது.

இங்கு இலங்கை அரசு சமாதான நடவடிக்கைகளில் முடக்கத்தைக் காட்டிவிட்டு, படை தயார்படுத்தல்களில் தீவிரம் காட்டி வருவதன் வெளிப்பாடான விடயங்களில் புதியது இந்த போர்த்திட்டமிடல் குழு அமைப்பேயாகும்.

புதிய ஆண்டில் இலங்கை அரசு வரவு - செலவுத்திட்டத்தில் போருக்கான ஒன்றாகவே பாதுகாப்புச் செலவீனத்தை அதிகரித்துள்ளது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகள் பாரியளவில் இருக்கின்ற போதிலும், அதனையும் மீறி இராணுவத்துக்கு 98 ரி 55 ரக டாங்கிகளை சீனாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான அனுமதி சந்திரிகாவால் வழங்கப்பட்டிக்கிறது.

கடற்படைக்கு இந்தியாவிடமிருந்து சுகன்யா ரக ஆழ்கடற்கண்காணிப்பு உலங்கு வானூர்தி தாங்கிக்கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது. அமெரிக்கா வழங்கிய கரேஜஸ் ஆழ்கடல் கண்காணிப்புக்கப்பலுக்கான கனரக பீரங்கியும் கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதைவிட கொள்வனவுக்காக படையதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்று வருகின்றனர்.

ஆயினும் இத்துணை வேகம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அரசைப் பொறுத்தவரை தம் இராணுவ மேலாண்மையை உயர்த்தி, அதன் மூலம் மக்களை மிரட்டுவது தமது திட்டத்தை அமுல்படுத்துவது ஆகியனவே அடிப்படை நோக்கம்.

இப்பொழுது சந்திரிகா அதிகம் கடற்படையில் அக்கறை காட்டுகின்றார் என்பது, தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற படை உயர் நிலை நியமனங்கள் மூலம் தெரிகிறது. போர் நிறுத்தத்தில் பாரதூரமான மீறல்கள் இலங்கை கடற்படையினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிகமானளவு விடுதலைப் புலிகள் கடற்படையினரால் வீரச்சாவைத் தழுவியிருக்கின்றனர். தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படை முல்லைத்தீவுக் கடலில் 'வருணகிரண' படை நடவடிக்கையை [தற்போது அமைதி வேளையிலும்] மேற்கொண்டவண்ணமேயுள்ளது. இதன் மூலமும் இலங்கைக் கடற்படையின் மீது சந்திரிகா காட்டுகின்ற அதீத அக்கறை தெரிகின்றது.

படைத்தரப்பில் கடற்படைத் தளபதியே சந்திரிகாவுக்கு அதிவிசுவாசமாகச் செயற்படுபவர் என்ற உண்மையும் உள்ளது. இதனாலேயே இலங்கைப் படைவரலாற்றில் முப்படைத் தலைமை அதிகாரியாக முதற்தடவையாக கடற்படைத் தளபதி வைஸ் அடமிரல் தயா சந்தகிரி நியமிக்கப்பட்டார். சேவை மூப்பு அடிப்படையில்தான் இந்த நியமனம் இடம்பெற்றது என்று அரசுத் தரப்பில் கூறினாலும் கூட முன்னரும் சேவை மூப்பில் கடற்படைத் தளபதிகள் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் எந்தவகையிலும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இப்பொழுது அமைதிக் காலத்தில்கூட, ஒரு படை நடவடிக்கை இடம்பெறுகிறதெனில், அது கடற்படை நடவடிக்கைதான். ஆகக் கடற்படைக்குச் சந்திரிகா வழங்கும் முக்கியத்துவம் ஏன் என்பது தெரிகிறது. தயா சந்தகிரிக்கு அடுத்து சந்திரிகா புதிதாக அமைத்துள்ள போர்த்திட்டமிடல் குழுவுக்கும், கடற்படைத் தளபதி ஒருவரே சந்திரிகாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படைத் துணைத்தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். சரத் வீரசேகர இலங்கைக் கடற்படையின் தமிழர் தாயகப் பகுதியிலுள்ள கடற்படையின் கிழக்குக் கட்டளையகம் அதாவது கொம்ஈஸ்ட் தளபதியாகவும் வடக்குக் கட்டளையகம் அதாவது கொம்நோர்த் தளபதியாகவும் இருந்தவர்.

இதன்மூலம் தமிழர் பகுதிக்கடல் அனுபவம் நிறைந்த ஒருவரை இந்தக் குழுவுக்குச் சந்திரிகா தலைமையாளராக நியமித்திருக்கிறார் என்றால், அவரின் நோக்கம் புரியும். இப்போது இராணுவத்தைப் பொறுத்தவரை கள அனுபவம் அதிகம் கொண்டவர் இலங்கை இராணுவத் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா.

ஆகவே அடிப்படையில் இலங்கை முப்படைகளிலும் அவரே மூத்தவராக இருப்பார். இத்தகைய நிலையில் இருந்த ஜானக பெரேராவை அரசியற் காரணங்களுக்காக சந்திரிகா அவுஸ்ரேலியத் தூதுவராக அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆக இக்குழு தேர்வுமுறையில் ஒருவகை அரசியலும் தெரிகிறது. அது அவர்களின் பிரச்சினை, ஆனால் சந்திரிகாவின் இந்தக் குழு அமைப்பானது அவரின் போர்நாடும் முனைப்பின் புதியதொரு நகர்வு சமாதானத்துக்கு ஒரு பின்னகர்வு. ஏற்கனவே நோர்வேயைப் பின் தள்ளி இந்தியாவுக்குச் சமாதான நட வடிக்கையில் முன்னுரிமை கொடுக்க முனைவதும், இந்தியாவின் பாதுகாப்பு உடன்பாடு செய்யப்படுவதில் இறுதி நிலைக்கு வந்திருப்பதும், சமாதானம் பின்ன கர்கின்றது என்பதற்கு வலுவான சான்றுகளாகிவிட்டன.

- அதிதிரு

# அரபாத்தின் உடல்நிலை மோசமடைந்து செல்கிறது



பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள பேர்நியூ மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றுவரும் பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத்தின் உடல்நிலை மீண்டும் மோசமடைந்து ஹோமா நிலையினை அடைந்துள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அரபாத், தொடர்ந்து வாந்தியெடுத்துவருவதால் அவர் ஹோமா நிலையினை அடைந்துள்ளதாகத் தொவிக்கப்படுகிறது.

யாசீர் அரபாத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனைகளின்படி அவரது குருதியில், குருதியை உறையவைக்கும் கலங்களின் அளவு குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், யாசீர் அரபாத்தின் உடல்நிலை திடீரென மோசமடைந்தமைக்கான காரணத்தை இதுவரை வைத்தியர்கள் உறுதியாகத் தெரிவிக்கமுடியவில்லை. யாசீர் அரபாத்திற்கு குருதிப் புற்றுநோய் இல்லையென உறுதிபடத் தெரிவித்துள்ள வைத்தியர்கள் பல்வேறு பரிசோதனைகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.

யாசீர் அரபாத்தின் உடல்நிலை மோசமடைந்தமைக்கான காரணத்தையும், தற்பொழுது அவருக்கு அளிக்கப்பட்டுவரும் சிகிச்சைகள் மற்றும அவரது தற்போதைய உடல்நிலை தொடர்பாக இன்று வைத்தியர்கள் தகவல் தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. யாசீர் அரபாத்தின் உடல்நிலை மோசமடைந்ததையடுத்து பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயலாளரும் முன்னாள் பலஸ்தீனப் பிரதமருமான ம.்.மூட் அப்பாஸ் - அரபாத்தைச் சந்திப்பதற்காக பாரிஸ் சென்றுள்ளார்.

இதேசமயம் அரபாத் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றியடைந்துள்ள ஜோர்ஜ் புஷ்ஷிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதாகச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## தவறிவிட்டது

மூக்குக்கண்ணாடி, திறப்புக்கோர்வை மற்றும் ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிறக் கைப்பை யாழ்.நகர்ப்பகுதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல.127, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ரூபா 10,000 /= சன்மானம் வழங்கப்படும்.
T.P. 021 222 7242 (976)

# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக் குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| யாழ்.மாவட்டத்தில் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணித்தல் | M 6 | 520,000/= | 750/= |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICATD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை ரூபா 520,000 மீளளிப்புச் செய்யமுடியாத தொகை ரூபா 750/= யையும் செலுத்தி 24.11.2004 ம் திகதி பிற்பகல் 3 மணிவரை விண்ணப்பப்படிவத்தினையும் BOQ வையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத்தொகுதிகளை (இணைப்பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறிவைத்த கேள்விகளைக் கொண்ட தபால்'உறையில் இடதுபக்க மேல் மூலையில் "யாழ்ப்பாணம் கலாசார மண்டபம் நிர்மாணித்தல்" என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் "தலைவர் யாழ்.மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 25.11.2004 ம் திகதி பி.ப. 2 மணிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல்வேண்டும். இதன்பின்னர் கேள்விகள் 25.11.2004 திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப்பெட்டி திட்டப்பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.
10. மேலும் விளக்கங்கள் தேவைப்படும் பட்சத்தில் எமது ஆலோசக பொறியியலாளர் எந்திரி K.V.கணேஸ்குமார் அவர்களை கீழ் மாடியிலுள்ள அவரின் பணிமனையில் 2004.11.22 திகதி முற்பகல் 9 மணிக்கும் நண்பகல் 12 மணவரையுள்ள காலப்பகுதியில் சந்தித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மாவட்ட கேள்விச்சபை,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
04.11.2004

செ.பத்மநாதன்.
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை,
யாழ்ப்பாணம்

(சி-3324)




## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

கேட்டை நட்சத்திரம் 4 ம் பாதம சைவ உயர்குலம் 50 வயது மணமகனுக்கு, அழகிய வெள்ளைநிற பூசம் அல்லது ரோகினி நட்சத்திர 30 வயதுக்குட்பட்ட பெண் தேவை. சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி. கனகரத்தினம் யோகேந்திரன் - 91, அரசடி வீதி, யாழ்ப்பாணம். *(975)*

### சமாதானம் நிலைபெற வழிகாட்டுகை

சமாதானத்துக்கான பிரார்த்தனையும், வெள்ளிக்கிழமை விரத வழிபாடும் சிறக்க சகலரும் பங்கு கொள்க. மக்கள் சேவையுடன் மீள் புனரமைப்புப்புக்கள் முன்மைபெற பணியாற்றுக. வே.கெ.தனபாலன், இணைப்பாளர், இந்துசமய அரச ஊழியர்கள் இணையம். - 223, தேக்கம் தோட்டம் வவுனியா. *(974)*


நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
TYCUS
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 8.30 (பு.நே)
(சி-3319)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ராஜ்கிரன் நடித்த
கொஞ்சிப்பேசலாம்
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
DARE DRAVIN
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45, (பு.நே)
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
கடைசிவாரம்
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த
7/G றெயின்போ காலனி
இது ஒரு உண்மைக் கதை
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்
(C-3319)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான பிறிமா கிறீன் மா கேள்விகோரல் - யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் - 2004**

